Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

வள்ளுவர் ஆண்டு 2036 ஆடி 16 திங்கட்கிழமை (01.08.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :248

# லிகளின் போக்குவரத்துக்கு
# ரசு புதிய யோசனைத் திட்டம்

## ன்னியில் தீவிர பரிசீலனையில்

கொழும்பு,ஓகஸ்ட் 1

கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் தளபதிகள், பொறுப்பாளர்கள், ளிகளின் பாதுகாப்பான போக்குவரத்துக்கு புதிய யோசனைத் திட்ட மொன்றை தரப்பு முன்வைத்துள்ளது.

னியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமை இத்திட்டத்தை தீவிரமாகப் பரி வருவதாகத் தெரியவருகிறது.

டுப்பாட்டுப் பகுதிகளில் போராளி துகாப்பான போக்குவரத்து விவ ம் சர்ச்சையைக் கிளப்பியிருப்பது

பகாரம் தொடர்பாக அரசுத் தரப்பில் மர்ப்பிக்கப்பட்ட யோசனையை புலிகள் நிராகரித்திருந்தனர். ல் இலங்கை அரசின் பாதுகாப் ளர் மேஜர் ஜெனரல் அசோக லைமையில் முப்படைத் தள ச சமாதானச் செயலகப் பிரதிநிதி கள் ஆகியோர் அடங்கிய குழுவினர் கடந்த வாரம் நடைபெற்ற ஒரு கூட்டத்தின் பின்னர் புதிய யோசனைத் திட்டம் ஒன்றைக் கண் காணிப்புக் குழுவிற்குச் சமர்ப்பித்துள்ளனர்.

இந்தத் திட்டம் கடந்த 27ஆம் திகதி கண் காணிப்புக் குழுவினரால் புலிகளின் தலை மைக்குத் தெரிவிக்கப்பட்டது.

போராளிகளின் பாதுகாப்பான போக்கு வரத்துக்கான ஏற்பாடுகள், கால ஒழுங்குகள் மற்றும் விவரங்கள் இதில் அடங்கியிருந்தன எனத் தெரியவருகிறது.

புலிகளின் தலைமை இந்த யோசனையை ஆழமாகப் பரிசீலித்து வருவதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த யோசனை தொடர்பாக புலிகளின் பிரதிபலிப்பு மிகவிரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

போக்கு ரத்து விடயத்தில் ஏற்பட்டுள்ள

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பதில் கிடைக்கவில்லை

கொழும்பு,ஓக.1

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசியல் பணியில் ஈடுபடும் விடுதலைப் புலிப் போராளிகளின் பாதுகாப்பான பயணம் பற்றி அரசு புதிதாகச் சமர்ப்பித்த யோசனைகள் குறித்து விடுதலைப் புலிகள் இதுவரை எந்தப் பதிலையும் வழங்கவில்லை என்று கண் காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

பாதுகாப்புச் செயலாளர் அசோக ஜய வர்த்தனவின் தலைமையில் கடந்த வாரம் முப்படைகளின் தளபதிகள் மற்றும் சமா தான செயலகத்தின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் போராளிகளின் போக்கு வரத்துக் குறித்து சில புதிய யோசனைகள் தெரிவிக்கப்பட்டன. அவை விடுதலைப் புலி களுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று கண்

(12ஆம் பக்கம் பார்க்க)

ாதை புனர்மைப்புக்காக

## ாலி விமான நிலையம் ாதங்கள் மூடப்படும்!

### ரிகள் போக்குவரத்தும் தடைப்படும்

கொழும்பு,ஓக1

ணத்திலுள்ள பிரதான விமானந் ாலியின் ஓடுபாதை புனரமைக் . இதனால் 5 மாதங்களுக்கு லயம் போக்குவரத்துக்கு மூடப் விமானப் படைத் தளபதி ஏயார் ல் டொனால்ட் பெரேரா தெரி

ானத் தளம் ஊடாகவே யாழ்ப் பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான விமானப் போக்குவரத்து இடம்பெற்றுவந் தது. ஓடுபாதை புனரமைக்கப்படும் வரைக் கும் - 5 மாதங்களுக்கு - இந்த விமான நிலை யம் ஊடாக விமானப் போக்குவரத்துகளை மேற்கொள்ள முடியாது என்றும் விமானப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## செத்சிறி ாய கட்டடத்தை வீடியோ எடுத்தாராம் முல்லை. பிரதேச செயலாளரின் சாரதி கைது!

கொழும்பு,ஓக.1

செத்சிறிபாய கட்டடத்தொகுதியை வீடியோப் படமெடுத்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் முல்லைத்தீவுப் பிரதேச செயலாளரின் வாகனச் சாரதி பொலீஸாரால் கைதுசெய்யப் பட்டார். இதுதொடர்பாக முல்லைத்தீவுப் பிர தேச செயலாளரும் பொலீஸாரால் விசாரிக் கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் செத்சிறிபாய கட்டடத் திலுள்ள அமைச்சர் தினேஷ் குணவர்தனவின் அமைச்சில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொள்வதற்காக கொழும்புக்கு வந்த முல்லைத்தீவு பிரதேச செயலாளரும் அவரது சாரதியுமே பொலீஸாரால் விசாரிக்கப்பட்டனர்.

கட்டடத்துக்கு வெளியில் நிறுத்தப்பட்டி ருந்த பிரதேச செயலாளரின் வாகனத்தில் அமர்ந்தவாறு அவரது சாரதி மேற்படி கட் டடத்தையும் அதன் சுற்றுப்புறங்களையும் படம்பிடித்துக் கொண்டிருந்த சமயமே அப் பகுதியில் விசேட கடமையில் ஈடுபட்டிருந்த பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

பிரதேச செயலாளரின் வாகனச் சாரதியை விசாரணைக்குட்படுத்திய பொலீஸார் பின்னர் பிரதேச செயலாளரையும் விசாரணைக்காக அழைத்துச் சென்றனர். குறிப்பிட்ட வீடியோ கமராவில் கொழும்பின் முக்கிய பகுதிகள் படம்பிடிக்கப்பட்டுள்ளதாக பொலீஸார் தெரி வித்தனர். (க)

## தப்பற்றாளர் கௌரவம்

கிளிநொச்சி,ஓக.1

ாக்கிழமை மாரடைப்பால் யைச் சேர்ந்த விஜயரட் ர்மன் தமிழீழ விடுதலைப் புலி வரன் ாராகக் கௌரவிக்கப் ப் பற்றி

ஆண்டி ருந்து விடுதலைப் ர்மன் பண கத்துடன் இணைந்து பாவ் நகர செயற்பாட்டாளரா ர் அந்த ரின் தமிழாலய வும் சேவை ாற்றியவர் இவர். தவுடல் நல்ல கம் எதிர்வரும் இடம்பெறவுள்ளது. (ஓ)

## ஆயுதங்களை புலிகள் கையளிக்கவேண்டும் என்பது இப்போது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு விடயமல்ல!

### ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி. தெரிவிப்பு

தமிழ்த் தேசியத்திற்குப் பாதுகாப்பு அற்ற சூழலில் ஐரிஸ் விடுதலை இராணுவம் ஆயுதங்களை ஒப்படைக்க முன்வந்தது போன்று விடுதலைப் புலிகளும் ஆயுதங்களை ஒப்படைக்கவேண்டும் என்று கோரிக்கை விடுப்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு விடய மல்ல.

லண்டனில் உள்ள ஐரிஸ் விடுதலை இரா ணுவம் போன்று விடுதலைப் புலிகளும் ஆயுதங்களைக் கையளிக்கவேண்டும் என்று இலங்கை அரசு கோரிக்கை விடுத்திருப்பதா கக் கூறப்படுவது தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ள கருத்து வருமாறு:-

விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் செய்துகொண்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் ஏதாவது ஒரு தரப்புக்கு ஆர்வமில்லை அல்லது ஏற்றுக்கொள்ளமுடியாத சூழ்நிலை ஏற்பட்டால் 14 நாள்கள் தவணையுடன் யுத்த நிறுத்த உடன்படிக்கையிலிருந்து வெளியேற லாம் என்று யுத்தநிறுத்த உடன்படிக்கையில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

கடந்த மூன்றரை வருடங்களாகச் சமா தானப் பேச்சு தொடர்ந்த ஆறு சுற்றுப் பேச்சு களுக்குப் பிற்பாடு அது தடைப்பட்டிருக் கிறது; இடைநிறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால்,

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கள இளைஞர்கள் கடத்தப்பட்டனர்

தமண பன்லைகம என்ற இடத்தில் வய லுக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த இரண்டு சிங்கள இளைஞர்கள் ஆயுததாரி களால் கடத்திச்செல்லப்பட்டுள்ளனர். அவர் களின் பிடியிலிருந்து தப்பியோடி வந்த மற்றொரு இளைஞர் மீது அந்த ஆயுததாரி கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத் தில் அவர் படுகாயமுற்றார். அவர் பின்னர் அம்பாறை வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது. பன்லைகம என்ற காட் டுப் பகுதியில் உள்ள கிராமமொன்றில் வசிக்கும் பிரேமஜயந்த, திஸாநாயக்க என்ற இரு இளைஞர்களே கடத்திச் செல்லப்பட்ட வர்களாவர். உதயசிறி என்ற இளைஞர் துப் பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் அம்பாறை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ாதிதித் தேர்தலில் ஜே.வி.பியும் ட்டியிடுவது அக்கட்சிக்கு நஷ்டம்

### இப்படிக் கூறுகிறார் அமைச்சர் டி.எம்.ஜயரத்ன

கொழும்பு,ஓக.1

ம் ஜனாதிபதித் தேர்தில் சியும் வேட்பாளர் ஒருவர சுதந்திரக் கட்சிக்குத் தற்கா ம். ஆனால், அதனால் ஜே. நஷ்டமே ஏற்படும். தெரிவித்தார் பொதுஜன பின் பொதுச்செயலாளர் த் தொடர்புக்கள் அமைச் ரட்ன. ட்சியின் அடுத்த ஜனாதிப பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பட்டுள்ளது குறித்து செய் யாளரிடம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இப்படிக் கூறினார்.

அடுத்த பிரதமராகும் நபர் என்ற எதிர் பார்ப்புடன் சு.கட்சியில் இருந்த பலரில் நீங் களும் ஒருவர்தானே? என்று அவரிடம் கேட் கப்பட்டது. அதற்குப் பதிலளித்த அவர் -

பிரதமராகும் எதிர்பார்ப்புடன் பலர் இருந்திருக்கலாம் எனினும் முடிவில் யாரா வது ஒருவர்தானே தெரிவுசெய்யப்படமுடி யும் சரியாகச் சொல்வதாயின் ஜனாதிபதி வேட்பாளராயினும் பிரதமர் வேட்பாளரா யினும் தகுதியான ஒருவன் நானே. இதுபற்றி ஜனாதிபதி சந்திரிகாவே எனக்கு ஒரு சமயம் உறுதியளித்தார்.

ரட்ணசிறி விக்கிரமநாயக்காவைப் பிரத மர் ஆக்கியபோது அம்புலுவாவேயில் நடந்த வைபவம் ஒன்றில் கலந்துகொண்ட ஜனாதிபதி என்னிடம் 'இந்தநேரத்தில் பிரதமராக நிய மிக்கப்படவேண்டியவர் நீங்கள்தான். அதற்குத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

ங்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு; சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றில்!

கொழும்பு,ஓக.1

தனியார்துறை ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்க வழிசெய்வதற்கான சட்ட மூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவுள்ளது.

தனியார்துறைகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்கும் அரசின் 'வரவு - செலவுத் திட்ட சலுகை வழங்கல்' சட்டமூலம் எதிர்வரும் 9ஆம் திகதி நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவுள்ளதாக தொழிலாளர் தொடர்புகள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் தொடர்பான அமைச்சின் செயலாளர் மகிந்த மெடஹேவா தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே அமைச்சரவையால் இச்சட்ட மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து, நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவுள்ளது. கூடிய விரைவில் இச்சட்ட மூலத்தை நிறைவேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-206)

# ஆளற்ற வீட்டில் கதவுகள் திரு... நபருக்கு 15 மாதச் சிறைவாசம்

தென்மராட்சி,ஓக.1

மக்கள் மீளக்குடியமர்ந்துவரும் வேளையில் ஆள்களில்லாத வீடொன்றில் 4 சோடிக் கதவுகளைத் திருடிய நபருக்கு 15 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

சாவகச்சேரியில் உள்ள ஒரு வீட்... அத்துமீறி நுழைந்து 4 சோடிக் கதவுகளைத் திருடி வைத்திருந்தார் என்ற குற்றத்துக்காக நாகலிங்கம் மகேந்திரன் என்பவருக்கே சாவகச்சேரி நீதிமன்றம் இத்தண்டனையை விதித்தது.

வீட்டினுள் அத்துமீறி நுழைந்தமைக்காக 6 மாதங்களும் - கதவுகளைத் திருடியமைக்காக 6 மாதங்களும் -

திருடப்பட்ட பொருள்களை வை... தமைக்காக மூன்று மாதங்களுமென ... சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இத்தண்டனைகளை ஒன்றன்பின் ... குற்றவாளி அனுபவிக்கவேண்டுமென நீ...வான் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ள...

(ஒ...

# வன்செயல்களால் பாதிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு நஷ்டஈடு

நல்லூர்,ஓக.1

யாழ்ப்பாணத்தில் வன்செயலால் பாதிக்கப்பட்ட 35 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நஷ்டஈடாக 550 மில்லியன் ரூபாவை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும்

விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிக்கவும் தம்புள்ளவில் உள்ளது போன்று பொருளாதார வலயத்தை யாழ்ப்பாணத்தில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் -

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையின் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகள் தொடர்பாகப் பேசிய யாழ். அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார். (ஒ-111)

# பிரதமருக்கு ஆதரவாக நேற்று தங்காலையில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஓக.1

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக தங்காலையில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. தங்காலையில் ஹேனகடுவ விகாரைக்கு முன்னால் திரண்டவர்கள் ஐ.தே.கவுக்கு எதிராகக் கோஷம் எழுப்பினர்.

பிரதியமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் 'ருகுணுவில் இருந்து அரசியலுக்குள் பிரவேசித்த மஹிந்த ராஜபக்ஷவே இந்த நாட்டின் ஜனாதிபதி. அவர் இந்த நாட்டின் தலைவராவதை யாராலும் தடுத்துநிறுத்த முடியாது' - என்று கோஷம் எழுப்பப்பட்டது.

கொடையாளிகளிடம் இருந்து பெறப்பட்ட நிதியை 'ஹெல்பிங் அம்பாந்தோட்டை' தனிப்பட்ட கணக்கில் வைப்பிலிட்டது தொடர்பாக பிரதமர் மீது ஐ.தே.க செய்துவரும் பிரசாரங்கள் முற்றிலும் தவறானவை. பிரதமர் மீது எப்படியான பிரசாரங்களை முடுக்கிவிட்டாலும் அவரை ஜனாதிபதியாக்குவோம் என்று ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் தெரிவித்தனர். நேற்று தங்காலையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் அரசின் அமைச்சர்கள் சிலரும் கலந்துகொண்டனர்.

தென்பகுதியில் தொடர்ந்து இது போன்று பிரதமரை ஆதரித்து ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தென்பிராந்தியக் கிளைகள் தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகிறது. (க)

# அரசமைப்புச்சபை வெற்றிடங்க... நிரப்புவது குறித்து ஆலோசனை...

கொழும்பு,ஓக.1

அரசமைப்புச் சபையில் தற்போது 5 உறுப்பினர் பதவி வெற்றிடங்கள் உள்ளன. அவற்றுக்கு ஐந்து பேரை ஜனாதிபதிக்குச் சிபார்சு செய்ய நாளை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் ஆலோசனை நடத்தவுள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் முதல் இப்பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படாதுள்ளன. இதனால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நிலவும் பதவி வெற்றிடங்களை நிரப்பமுடியாதுள்ளது. அதுபோன்றே அரசமைப்புச் சபையில் நிலவும் பதவி வெற்றிடங்கள் வெகு விரைவில் நிரப்பப்படாதுவிடின், நிர்வாக சேவைகள் ஆணைக்குழு, பொலீஸ் ஆ... குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு... றும் நிதி தொடர்பான ஆணைக்குழு ஆ... ஆணைக்குழுக்களில் இடம்பெறவிருக்... பதவி வெற்றிடங்களுக்கு உறுப்பினர்க... நியமிக்கும் செயற்பாடுகள் தாமதமாகு... அரசமைப்புச் சபையின் செயலாளர் ... மிக்க கித்துல்கொட தெரிவித்துள்ளார்

(ஒ20...

# கூட்டுறவு தின விழா...

வலி.வடக்கு,ஓக...


யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச்சபையின் ஏற்பாட்டில் 83ஆவது சர்வதேசக் (கூட்டு)றவு தின விழா நிகழ்வுகள் நேற்று மாலை 4.45 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபதில் கூட்டுறவுச் சபைத்தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் (இ)டம்பெற்றன.

முன்னதாக, பிற்பகல் 3 மணியளவில் மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கூடிய கூட்டுறவாளர்கள் ... மருதனார்மடம் வீதி வழியாக இராமநா... கல்லூரியை வந்தடைந்தது.

அலங்கரிக்கப்பட்ட வாகன ஊர்திகளும் இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டன.

இதனைத் தொடர்ந்து பனை, தென்... வள அபிவிருத்திக் கூட்டுறவு உதவி ஆ... யாளர் எஸ்.ஐயாத்துரை, இராமநா... கல்லூரிஅதிபர் திருமதி ஆனந்தி சிவ... சுந்தரம்ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள். ...துடன் கூட்டுறவு தினத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோர்களி... நிகழ்வுகளும் பரிசளிப்பும் நாடகமும் இடம்பெற்றன. (ஒ-8...





யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்ற பேரணியின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. (படங்கள் : நேசன்)

# 'டிஸ்கவரி' பாதுகாப்புக் குறித்து ஆய்வு

டிஸ்கவரி விண்கலத்தில் சென்ற இரண்டு விண்வெளி வீரர்கள் நேற்றுமுன்தினம் விண்வெளியில் நடந்தனர். டிஸ்கவரியின் பாதுகாப்பு அம்சங்கள் குறித்து அவர்கள் ஆராய்தனர். அது பூமிக்குத் திரும்புவதில் எதுவித ஆபத்தும் இல்லை எனத் தெரிவித்தனர்.

கடந்த 26ஆம் திகதி டிஸ்கவரி விண்வெளி ஓடம் செலுத்தப்பட்டபோது அதிலிருந்து இரண்டு பாகங்கள் கழன்றுவிழுந்தன.

எனவே, டிஸ்கவரியின் ஒவ்வொரு பாகமும் உன்னிப்பாகப் பரிசோதிக்கப்படுகிறது. டிஸ்கவரியில் பொருத்தப்பட்டுள்ள நூறடி நீள ரோபோ கரத்தின் மூலமும், சர்வதேச விண்வெளி நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள ரோபோ கரத்தின் மூலமும் டிஸ்கவரியின் வெப்ப பாதுகாப்புத் தகடுகள் கடந்த வியாழக்கிழமை பரிசோதிக்கப்பட்டன.

பூமிக்குப் பாதுகாப்பாகத் திரும்பக்கூடிய அளவுக்கு டிஸ்கவரியில் நல்ல நிலையில் இருப்பதாக இதன் திட்ட நிர்வாகிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். அடுத்த மாதம் 7ஆம் திகதி ஓடம் பூமிக்குத் திரும்ப முதலில் திட்டமிடப்பட்டிருந்தது. தற்போது மேலும் ஒருநாள் நீடிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஓடத்தின் எரிபொருள் கலத்தில் தொடர்ந்து பிரச்சினை ஏற்படுவதால் அதற்கு நிரந்தரத் தீர்வுகாணும் வரை மீண்டும் ஓடங்களை ஏவுவதில்லை என்று நாஸா முடிவு செய்துள்ளது.(ஒ)

# சதாம் ஹுசைனை தாக்கினார் மர்மநபர்! விசாரணைக்கு வந்தபோது சம்பவமாம்!

அம்மான்,ஓக.1

ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் விசாரணைக்காக நீதிமன்றில் ஆஜராகி இருந்தபோது அவரை மர்மமனிதன் ஒருவர் தாக்கினார் என்று சதாம் ஆதரவு சட்ட நிபுணர்கள் தெரிவித்தனர்.

இந்தப் பரபரப்பான சம்பவம் பற்றிய விவரத்தை சட்டநிபுணர்கள் ஜோர்தான் தலைநகர் அம்மானிலிருந்து வெளியிட்டுள்ளனர்.

ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் மீது பக்தாத் நீதிமன்றில் 1991ஆம் ஆண்டு ஏற்பட்ட கல...ரத்தில் குர்திஷ் மற்றும்



ஷியா முஸ்லிம்களைக் கொன்று குவித்தா(ர்) என்று வழக்குத் தா(க்க)ல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு வி(சா)ரணைக்காக அவர் நீ(தி)மன்றில் அண்...யில் ஆஜராகியிருந்தார். அவருக்காக வரது சட்டத்தரணி கலீ... துலாய்மி வா(த)டி விசாரணை முடிந்தது(ம்) சதாம், அறை(யி)ல் இருந்து வெளியேறத் த... ரானார்.

அப்போ அங்கு நின்றுகொண்டிருந்... ஒரு மர்மமனிதன் சதாமைத் தாக்கினார். இதை ...ம் ...றும் எதிர்பார்க்கவில்லை. பிறகுவரும் அந்த மர்ம மனிதனை அடி...தார். ...ருவரும் ஒருவரையொருவர் அடி...துக்கொண்டனர்.

...தச் சண்டையை நிறுத்த நீதிபதியோ அ... கூடியிருந்தவர்களோ முயற்சி செய்யவில்லை. இந்தத் தாக்குதலில் சதாம் கா... அடைந்தாரா என்ற விவரம் தெரியவில்லை.

ஆனால், இந்தத் தகவலை அமெரிக்கா ம...துள்ளது. சதாம் அமெரிக்க இராணுவத் ... பாதுகாப்பில்தான் உள்ளார். அவரை ...நும் தாக்கவில்லை. நீதிமன்ற அறையில் ...க்குதல் சம்பவம் ஏதும்நடக்கவில்லை ...று அமெரிக்க இராணுவத் தளபதி கிறிஸ்டி...ல்லர் தெரிவித்துள்ளார். (க)

# புளூட்டோவுக்கு அப்பால் சுற்றும் 10 ஆவது கிரகம் கண்டுபிடிப்பு?

வாஷிங்ரன்,ஓக.1

சூரியக் குடும்பத்தின் கடைசிக் கிரகமான புளூட்டோவுக்கு அப்பால் இன்னொரு கிரகம் இருப்பதைக் கண்டுபிடித்துள்ளதாக அமெரிக்க வானியில் நிபுணர் மைக் பிரவுண் அறிவித்துள்ளார்.

கலிபோர்னியா தொழில்நுட்ப நிறுவனத்தில் கோள்கள் தொடர்பான வானியல் பேராசிரியராக இருக்கும் அவர், ஹவாயின் மாவ்னா கியாவில் உள்ள ஜெமினி வானியல் ஆய்வு நிலையத்தைச் சேர்ந்த சாட்ட்ருஜில்லோ, யேல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டேவிட் ராபினோவிட்ஸ் ஆகியோருடன் சேர்ந்து இதைக் கண்டுபிடித்துள்ளார்.

முதன்முதலாக 2003 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 31ஆம் திகதி கலிபோர்னியாவின் சான்டியாகோ அருகேயுள்ள பாலமர் ஆய்வு நிலையத்திலுள்ள தொலைநோக்கி மூலம் இதைக் கண்டுபிடித்தார் பிரவுண். அது பூமியிலிருந்து சுமார் 1,500 கோடி கிலோமீற்றர் தொலைவில் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

அதாவது சூரியனில் இருந்து பூமி எவ்வளவு தூரத்தில் இருக்கிறதோ, அதேபோல் 97 மடங்கு தொலைவில் இருக்கிறது. உறைநிலையில் உள்ள மெதேன் வாயுவினால்(மெதேன் ஐஸ்கட்டி) ஆனது அப்புதிய கிரகம் என்று பிரவுண் கூறுகிறார்.

அது மிகவும் தொலைவில் இருப்பதால் அதன் அசைவுகளை ஆராய்வதற்கு விஞ்ஞானிகளுக்குப் பல மாதங்கள் ஆகிவிட்டன. புளூட்டோ கிரகத்தின் விட்டம் 2,302 கிலேமீற்றராகும். அதைப் போன்ற அளவிலோ அல்லது அதைவிட ஒன்றரை மடங்கு அளவு உடையதாகவோ புதிய கிரகம் இருக்கலாம் என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

மைக் பிரவுணின் கண்டுபிடிப்பு அறிவியல் ரீதியில் சரியானதுதான் என்று சர்வதேச வானியல் ஆய்வுச் சங்கம் உறுதிப்படுத்த வேண்டும். அதற்குப் பிறகுதான் புதிய கிரகத்துக்குப் பெயர் சூட்டப்படும். அதுவரை அதைத் தற்காலிகமாக '2003-யுபி 313' என்று அழைப்பது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

1930ஆம் ஆண்டு புளூட்டோ கண்டுபிடிக்கப்பட்டது. அதற்குப் பிறகு ஒரு புதிய கிரகம் இப்போதுதான் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அது சர்வதேச விஞ்ஞானிகள் அமைப்பால் உறுதிப்படுத்தப்பட்டுவிட்டால், இனி சூரியனை 9 கிரகங்கள் சுற்றிவருகின்றன என்பதற்குப் பதில், 10 கிரகங்கள் சுற்றிவருகின்றன என்று வான் அறிவியல் பாடத்தையே மாற்றவேண்டிவரும் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## ஜனாதிபதித் தேர்தல் பற்றிய சர்ச்சை நேரத்துடனேயே நீதிமன்றுக்கு?

தென்னிலங்கையின் பிரதான கட்சிகள் இரண்டின் சார்பிலும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போகின்றவர்கள் யார் என்ற விடயம் தீர்மானிக்கப்பட்டிருப்பதைத் தொடர்ந்து அடுத்த ஜனாதிபதித் தேர்தல் எப்போது என்ற கேள்வி தெற்கில் பெரும் அரசியல் சர்ச்சையாக எழுந்திருக்கிறது.

தமது நாட்டின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்ற அதி உச்சப் பதவியை வகிக்கின்றவரை தமது வாக்குகள் மூலம் தெரிவுசெய்யும் வாய்ப்பு - சந்தர்ப்பம் - தமக்கு இனி எப்போது கிடைக்கும் என்பதைத் தெரிந்து கொள்ள முடியாத கேவல நிலையில் இலங்கை மக்கள் இருப்பது துரதிஷ்டவசமானது; மனவருத்தத்துக்குரியது. அது ஜனநாயகத்தின் பின்னடைவு.

எது எப்படியென்றாலும் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான தமது நிலைப்பாட்டை - அல்லது முக்கிய அறிவித்தலை - தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க இவ்வார இறுதியில் அல்லது அடுத்த வார முற்பகுதியில் வெளியிடுவார் என்ற எதிர்பார்ப்பு கொழும்பு அரசியல் வட்டாரங்களில் நிலவுகின்றது.

எவ்வாறாயினும் ஜனாதிபதித் தேர்தலை எப்போது நடத்துவது என்பதைத் தேர்தல்கள் ஆணையாளர் தீர்மானித்ததும் - அதாவது இந்த வருட இறுதியில் தேர்தலை நடத்துவதும் அல்லது நடத்தாமல் இருக்கும் ஒரு முடிவை அவர் எடுத்ததும்- இந்த விவகாரம் உயர் நீதிமன்றத்துக்குச் செல்லும் என்பதும் ஓரளவு உறுதியாகிவிட்டது.

"ஏறச் சொன்னால் எருதுக்கு கோபம்; இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம்"- என்ற மாதிரியான ஓர் இக்கட்டைத்தான் இந்த விடயத்தில் தேர்தல்கள் ஆணையாளர் எதிர்நோக்குகின்றார்.

ஜனாதிபதித் தேர்தல் இந்த வருட இறுதியில் என்று அவர் அறவிப்பாராயின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தரப்பும், அவரது கட்சியும் அதை ஆட்சேபித்து உயர்நீதிமன்றத்துக்குச் செல்லும். இல்லை, இந்தத் தேர்தல் அடுத்த வருடமே என்ற முடிவுக்குத் தேர்தல் ஆணையாளர் வருவாராயின் அதை எதிர்த்து பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி உயர்நீதிமன்றுக்குச் செல்லும்.

எப்படியும் இந்த விவகாரம் உயர்நீதிமன்றில் இழுபறிப்படப் போகின்றது என்பது உறுதி.

ஜனாதிபதித் தேர்தல் இந்த வருட இறுதியிலே என்று தப்பித் தவறி தேர்தல் ஆணையாளர் அறிவித்தால்- அப்படிச் செய்திகள் கசிந்துவரும் நிலையில் - அதை ஆட்சேபித்து அதற்குப் பின்னர் தமது தரப்பு நீதிமன்றத்துக்குப் போவதைவிட, அதற்கு முன்னரே இந்த விவகாரத்தை நீதிமன்றுக்கு விட்டு நிலைமையைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டால் என்ன என்று ஜனாதிபதி சந்திரிகா கருதுகின்றார் என்று அவருடன் நெருங்கிய வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது. அப்படி ஜனாதிபதி செய்வதற்கும் அரசமைப்பில் சில வசதிகள் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

பதவியில் இருக்கும் ஜனாதிபதி ஒருவர் நாட்டின் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயம் குறித்துப் பரிசீலித்து அதன் அபிப்பிராயத்தை வெளிப்படுத்தும்படி உயர்நீதிமன்றத்தைக் கோரலாம். அத்தகைய விடயத்தை உயர் நீதிமன்றம் விசாரித்துத் தனது கருத்தை ஜனாதிபதிக்குத் தெளிவுபடுத்த முடியும். ஆனால் -

இது 'ஆலோசனை நியாயாதிக்கம்' என்ற தலைப்பின் கீழ் அரசமைப்பால் உயர்நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பாகும்.

ஆலோசனை நியாயாதிக்கத்தின் கீழ் ஜனாதிபதி ஒருவருக்கு உயர்நீதிமன்றம் வழங்கும் ஆலோசனைத் தீர்ப்பு, ஜனாதிபதியையோ அல்லது வேறு அதிகாரிகளையோ கட்டுப்படுத்தாது (Non Binding) என்கின்றன சட்ட வட்டாரங்கள். ஆலோசனை என்று கூறப்படுவது வெறும் ஆலோசனையைத் தவிர அதற்கு மேல் அதற்கு வேறு சட்டவலு இல்லை என்றும் அவை கூறுகின்றன.

பிரதமரின் ஆலோசனையோடு அமைச்சரவையை ஜனாதிபதி நியமிப்பார் என்று சட்டம் கூறினாலும் அந்த ஆலோசனையை கட்டாயம் ஜனாதிபதி ஏற்றாகவேண்டும் என்பதல்ல. அப்படித்தான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசு இருந்தபோது ஜனாதிபதி குமாரதுங்க செயற்பட்டிருக்கிறார். பிரதமர் ரணிலின் ஆலோசனைக்கும், விருப்புக்கும் மாறாகவே பல அமைச்சுப் பொறுப்புக்களை அவரது அமைச்சரவையில் ஜனாதிபதி சந்திரிகா பிடுங்கி எடுத்துக்கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே, 'ஆலோசனை நியாயாதிக்கம்' என்ற தலைப்பின் கீழான அரசமைப்பு ஏற்பாடுகளை வைத்துக் கொண்டு, ஜனாதிபதித் தேர்தல் விடயத்தில் தமக்கு சாதகமான அம்சத்தை - நிலைப்பாட்டை - உயர்நீதிமன்றைக் கொண்டு ஜனாதிபதி வெளியிடவைத்தாலும், அது தேர்தல் ஆணையாளரைக் கட்டுப்படுத்துமா என்ற கேள்வியும் இயல்பாகவே எழுகின்றது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியை பதினொரு ஆண்டுகள் ஆண்டு, அனுபவித்த ஒருவர் அதில் மேலும் ஓராண்டு நீடிக்க வாய்ப்புக் கிடைத்தால் விடவா போகின்றார்? அந்த ஓராண்டுக்காக எந்தத் 'திருகுதாளத்தையும்' அவர் செய்ய முயல்வது தவிர்க்க முடியாததாகத்தான் இருக்கும்.

# இந்தியத் துணைத் தூதரின் வாகனம் ஏ-9 வழியே வன்னிக்கு அனுப்பப்பட்டதாம்!

## தூதரக வட்டாரங்களில் சந்தேகம் என்கிறது 'லங்காதீப'

கொழும்பு,ஓக.1

கண்டி அம்பேபுஸ்ஸவில் வைத்து இனந்தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்ட இலங்கைக்கான இந்தியத் துணைத் தூதரின் வாகனம் விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்பட்டிருக்கலாம் என்று பாதுகாப்புப் பிரிவினர் மத்தியில் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறதாம்.

'லங்காதீப' சிங்களப் பத்திரிகை இப்படிச் செய்தி வெளியிட்டிருக்கிறது.

அம்பேபுஸ்ஸவிலுள்ள ஓய்வுவிடுதி ஒன்றின் அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இந்தியத் துணைத் தூதுவருக்குச் சொந்தமான இன்ரகூலர் வாகனம் கடந்த மாதம் 23ஆம் திகதி கடத்திச் செல்லப்பட்டது. ஆயினும் இது வரையில் அது தொடர்பாக எதுவிதமான தகவல்களும் கிடைக்கவில்லையென இந்த விவகாரம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் 29பேர் அடங்கிய பொலீஸ் விசாரணைக்குழு தெரிவித்துள்ளது.

இவ்வாறு வாகனங்களைக் கடத்திச் சென்று அவற்றை வெவ்வேறு பாகங்களாகப் பிரித்து வர்ணம் மாற்றி விற்பனை செய்துவரும் பல்வேறு சந்தேகக் கும்பல்கள் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ள போதிலும் எதுவிதமான தடயங்களும் கிடைக்கவில்லையென்றும், கடத்தப்பட்ட அன்றே மிகத் தந்திரமாக அப்பிரதேசத்தை விட்டு அவ்வாகனம் அப்புறப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலீஸ் மா அதிபர் சந்திரா பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

இதனிடையே கடத்தப்பட்ட அன்றே அந்த வாகனத்தின் வெளிப்புறத்தில் உள்ள அவதானிக்கும் பக்கக் கண்ணாடிகள் இரண்டும் அகற்றப்பட்டு பாரிய கொள்கலன் ஒன்றுக்குள் ஏற்றப்பட்டு அவ்வாகனம் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது என்ற தகவல்களைப் பாதுகாப்புப் பிரிவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

அவ்வாறு கடத்திச் செல்லப்பட்டுள்ள வாகனம் அன்றைய தினத்திலேயே ஏ-9 பாதையூடாக யாழ்ப்பாணம் நோக்கி கொண்டுசெல்லப்பட்டுள்ளதா என்றொரு சந்தேகத்தை இந்தியத் தூதரக வட்டாரங்கள் பாதுகாப்புப் பிரிவினர் முன் எழுப்பியுள்ளன.

அதற்கமைய, அந்த வாகனம் விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்பட்ட பின்னர் அவர்களது கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப் பிராந்தியத்துக்குள் கொண்டு செல்லப்பட்டிருக்கலாமெனவும் தூதரக வட்டாரங்கள் சந்தேகம் தெரிவித்துள்ளன.

இது தொடர்பான துப்புக்களை அறியும் நோக்கில் பொலீஸ் குழு ஒன்று யாழ்ப்பாணம் சென்றிருப்பது தெரியவந்துள்ளது.

இவ்வாறு லங்காதீப செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ-206)

# வலப்பனை மஹா ஊவா மலையில் புவியதிர்வு! கற்பாறைகள் பறந்தன!

கொழும்பு,ஓக.1

நுவரெலியா மாவட்டத்தில் வலப்பனைப் பிரதேசத்தில் உள்ள மஹா ஊவா மலையில் திடீரென ஏற்பட்ட புவியதிர்வு காரணமாக அந்த மலையின் கற்பாறைகள் பிளவுண்டு சுமார் 30 பாரிய கற்றுண்டங்கள் மலையிலிருந்து கீழ்நோக்கி வீசி எறியப்பட்டன.

கடந்த மாதம் 27 ஆம் திகதி மாலை சுமார் 6.30 மணியளவில் மின்னல், இடிமுழக்கத்தை ஒத்த பேரொளியுடன் பேரோசையும் கேட்டதாகவும், அதையடுத்து பாரிய கற்றுண்டங்கள் மலையடிவாரத்தை நோக்கி வீசி எறியப்பட்டன என்றும் - நீல நிறமான தூசுப் படலமொன்று பனிப்புகார் போன்று மலையைச் சூழ்ந்து கொண்டதாகவும் சம்பவத்தை நேரில் அவதானித்த அப்பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு வீசி எறியப்பட்டுள்ள சுமார் 10 அடி நீள, அகலம் கொண்ட பாரிய கற்றுண்டங்கள் மலையடிவாரத்தில் உள்ள தேயிலைச் செடிகளில் சிக்குண்டதால் கீழே அமைந்திருந்த கந்தேகம கிராமத்தில் உயிர்ச் சேதங்கள் ஏற்படவில்லை. (ஐ-206)

## மணற்காடு குடும்பங்களுக்குப் படகுகள்

ஆழிப்பேரலைகளினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி மணற்காட்டுப் பகுதியைச் சேர்ந்த 15 குடும்பங்களுக்கு மீன்பிடிப் படகுகள் வழங்கப்படவுள்ளன.

கனடாவில் இயங்கும் பட்டயக் கணக்காளர் அமைப்பினர் இந்தப் படகுகளை வழங்கவுள்ளனர்.

ஓகஸ்ட் 16 ஆம் திகதி படகுகள் வழங்கப்படவுள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் தெரிவித்தார். (ஐ-117)

# 160 நிரந்தர வீடுகளை நிறுவ 'கரித்தாஸ் - கியூடெக்' உதவி

யாழ்ப்பாணம்,ஓக.1

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தும்பளை வடக்கு முனை, சின்னத் தோட்டம் ஆகிய இடங்களைச் சேர்ந்த குடும்பங்களுக்கு கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம் 160 நிரந்தர வீடுகளை அமைத்துக்கொடுக்க முன்வந்துள்ளது.

இத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வாகக் கடந்த வாரம் 8 வீடுகளுக்கு அடிக்கல் நடுகை செய்யப்பட்டன.

நிகழ்வில் ஆழிப்பேரலை அனர்த்த செயலணிக் குழு நிர்வாக அதிகாரி அருட்தந்தை இருதயதாஸ், கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத் திட்டமிடல் முகாமையாளர், உதவித் திட்டமிடல் முகாமையாளர், பொறியியலாளர், கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

எஞ்சிய வீடுகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் அவை விரைவில் அமைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-204)

# ஊரெழு முகாம் புலனாய்வு அதிகாரி ஆணைக்குழு விசாரணைக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.1

திருநெல்வேலி பகுதியிலுள்ள கடை ஒன்றின் உரிமையாளர் ஒருவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் செய்த முறைப்பாட்டை அடுத்து ஊரெழு படை முகாமைச் சேர்ந்த புலனாய்வுப் பிரிவு உயர் அதிகாரியை விசாரணைக்கு சமுகமளிக்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகம் கேட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் திருநெல்வேலிப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றுக்குச் சென்ற படையினர் குறிப்பிட்ட வியாபார நிலையத்தின் உரிமையாளரை விசாரணை ஒன்றிற்காக ஊரெழு படை முகாமிற்கு வருமாறு அழைத்தனர்.

இதனையடுத்து குறிப்பிட்ட வர்த்தக உரிமையாளர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் அதுபற்றி முறைப்பாடு செய்தார்.

இது தொடர்பாக அந்த வர்த்தகர் யாழ். பொலீஸ் நிலையத்திலும் முறையிட்டார்.

இதனையடுத்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரி ஊரெழு படை முகாமைச்சேர்ந்த புலனாய்வுப் பிரிவின் உயர் அதிகாரியை விசாரணைக்காக நாளை மறுதினம் புதன்கிழமை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்திற்கு சமுகமளிக் குமாறு கேட்டுள்ளார். (ஐ-7-ரி)

# கலைப்பீடத்துக்கான பரீட்சைகள் 15ஆம் திகதி முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஓக1

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மற்றும் இராமநாதன் நுண்கலைக் கழக மாணவர்களுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

முதலாம் வருட முதலாம் அரையாண்டு கலைப்பீட மாணவர்களுக்கு எதிர்வரும் 15 ஆம் திகதியும்-

மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு கலைப்பீட மாணவர்களுக்கு எதிர்வரும் 25 ஆம் திகதியும்-

நான்காம் வருட முதலாம் அரையாண்டு கலைப்பீடமாணவர்களுக்கு செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதியும்-

இரண்டாம் வருட முதலாம் அரையாண்டு கலைப்பீட மாணவர்களுக்கு செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதியும்-

பரீட்சைகள் நடைபெறும்.

இதேவேளை-

கலைப்பீட மற்றும் இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்களுக்கான மீள் பரீட்சைகள் எதிர்வரும் 22 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெறும் என பதிவாளர் அறிவித்துள்ளார். (ஐ-204)

## உதயவாக்கு

ஆயிரம் வீண் வார்த்தைகளை விட கேட்பவர்களுக்கு இதமளிக்கும் ஒரு நல்ல வார்த்தை மேலானது.

- புத்தர்.

## நாளை

ஆடி 17
செவ்வாய்க்கிழமை
02.08.2005
திதி: திரயோதசி
பின்னிரவு: 05.23 வரை
நட்சத்திரம் : திருவாதிரை
பின்னிரவு : 12.28 வரை
பிரதோஷவிரதம்
சுபநேரம் : 10.33 - 12.03
ராகுகாலம்: 03.03 - 04.33
(வாக்கிய பஞ்சாங்க நேரப்படி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதாரப் பகுதியினரின் அனுமதி பெறாது மலசலகூடங்கள் அமைப்பு

வலி.தென்மேற்கு,ஓக.1

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் அமைக்கப்படும். சகல மலசலகூடங்களும் சுகாதார வைத்திய அதிகாரியின் அனுமதியும் சிபார்சும் பெற்றே கட்டப்படவேண்டும்.

கடந்த வாரம் நடைபெற்ற நல்லூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இவ்வாறு வலியுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட நல்லூர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சி.தயாமோகன் அங்கு உரையாற்றுகையில் கூறியதாவது:-

மலசலகூடங்கள் பலவும் சுகாதாரத் திணைக்களத்தின் அனுமதி பெறாமலும் அமைவிடங்கள் பற்றிய சுகாதாரப் பரிசோதகரின் சிபார்சைப் பெறாமலும் கட்டப்பட்டு வருகின்றன என்று பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. யாழ். சுகாதார சேவைப் பிரதி மாகாணப் பணிப்பாளர் இதனை எமக்கு அறிவித்துள்ளார். இவ்விடயத்தில் மிகவும் விழிப்பாக இருந்து கடமையாற்றுமாறும் எமக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் இப்பகுதியில் கட்டப்பட்ட மலசலகூடங்களுக்கும் மானிய உதவிகேட்டு எம்மிடம் சிலர் வருகின்றார்கள். மலசலகூடம் எதுவும் இல்லாதவருக்குத் திணைக்களத்தால் வழங்கப்படும் மானியத்தைப் பெற இவர்களுக்கு அருகதை எதுவும் இல்லை. ஆகவே, மலசலகூடங்களைத் தங்கள் வீடுகளில் நிறுவுபவர்கள் அதற்கு முறைப்படி முன்கூட்டியே விண்ணப்பித்து பொதுச்சுகாதாரப் பரிசோதகரின் அனுமதியையும் சிபார்சையும் பெற்ற பின்பே அதனை நிறுவவேண்டும் - இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஐ-135)

## வாழைகளில் குருமன் நோய் அதிகரிப்பு

கோப்பாய்,ஓக.1

கோப்பாய், நீர்வேலி ஆகிய பகுதிகளில் செய்கை பண்ணப்பட்ட பெருமளவு வாழை மரங்களில் குருமன் குருத்தடைப்பு நோய் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களோடு ஒப்பிடுகையில் இவ்வருடம் இதன் தாக்கம் அதிகமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இம்முறை இப்பகுதியில் பெருமளவு நிலப்பரப்பில் வெங்காயம் மற்றும் இராசவள்ளி போன்ற பயிர்கள் செய்கை பண்ணப்பட்டுள்ளன. (ஐ-72)

## கிணற்றில் வீழ்ந்து இளைஞன் காயம்!

தென்மராட்சி,ஓக.1

கிணறு துப்புரவுப் பணியில் ஈடுபட்டுவிட்டு மேலே ஏறியவர் தவறி கிணற்றுக்குள் வீழ்ந்து காயமடைந்தார்.

மிருசுவில் தவசிகுளத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த கந்தன் பேரம்பலம் (வயது 28) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்தியில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ஐ-117)

# கண்ணீர் அஞ்சலி



எமது அன்புக்கும் மதிப்புக்குமுரிய குடும்ப நண்பரும் கைதடி ஓவசியர் காலஞ்சென்ற விஜயரத்தினம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் தந்தை செல்வாவின் வழிநடந்து சமூகப் பணி ஆற்றியவருமான

**வி.கணேஸ்வரன்**

அவர்கள் 28.07.2005 அன்று ஜேர்மனியில் காலமாகிவிட்டார். அவரது மறைவால் துயருறும் அன்புச் சகோதரிகளுக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*"செல்வபதி",*
*கைதடி.*
(38393) (25-17-15-24)

**K.S.கணபதிப்பிள்ளை குடும்பத்தினர்.**

## அந்தியேட்டியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

பிறப்பு 06 . 03 . 1935



இறப்பு 02 . 07 . 2005

### அமரர் முத்தன் கிருஷ்ணன்

(01.08.2005)

விருட்சமென நிமிர்ந்து
எம்மையெல்லாம் வளர்த்த
தந்தையெனும் தெய்வமே!
இதயம் துடிக்கிறது- உங்கள்
இழப்புதனைத் தாங்காது.

*இன்றையதினம் (01.08.2005) திங்கட்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.*

- மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

*'பிறேமாவதி இல்லம்'*
*ஸ்ரீ வாகீஸ்வரி வீதி, கோண்டாவில் வடக்கு.*

(38394) (25-17-15-24)

*சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க பணியாளர் நலன்புரிச் சங்க அபிவிருத்தி நிதிக்கான*

### அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள் 30-07-2005

1. முதலாம் பரிசு:- இல: 847 (லுமாலா துவிச்சக்கர வண்டி)
2. இரண்டாம் பரிசு:- இல: 194 (½ பவுண் செயின்)
3. மூன்றாம் பரிசு :- இல: 289 (ஒரு செற் கதிரை)

**ஐந்து ஆறுதல் பரிசில்கள்:-**

1. இல.- 3578
2. இல.- 3959
3. இல.- 123
4. இல.- 1435
5. இல.- 1587


மேற்குறிப்பிட்ட பரிசுக்குரியவர்கள், பரிசுப் பொருள்களை ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் சங்கப் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

தகவல்:-
**க.ப.லோகநாதன்,**
*(பணியாளர் நலன்புரிச்சங்க - செயலாளர்)*

*சாவ.ப.தெ.வ.அ.கூ.சங்கம்,*
*கண்டி வீதி,*
*சாவகச்சேரி.* (38390)(46-17-15-18)

## நான்காண்டில் உமை நினைக்கையில்

மலர்வு 24 . 02 . 1952



உதிர்வு 01 . 08 . 2001

### அமரர் V. M. ஜெறாட் பீற்றர்சன் (J.P)

ஆண்டுகள் நான்கானாலும்
ஆயிரம் ஜென்மங்கள் கடந்தாலும்
அவனியில் நாம் வாழும் வரை
ஆ!.னே உமை மறவோம் நாம் என்றும்

பிரிவால் துயருறும்:

38, சென்.பற்றிக்ஸ் றோட்,
றெக்கின் மேசன்,
யாழ்ப்பாணம்.

மனைவி,
பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பொன்னையா சிவபாக்கியம்



சங்கானை மேற்கு, அம்பிகாவதி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னையா - சிவபாக்கியம் 30-07-2005 சனிக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா அவர்களின் அன்பு மனைவியும் நித்தியானந்தன் (கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை, மானிப்பாய்), நிர்மலா, சச்சிதானந்தன் (பிரான்ஸ்), விவேகானந்தன், வெண்ணிலா ஆகியோரின் அன்புத் தாயும் ஆவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01-08-2005) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கரைச்சி வழுக்கையாற்று மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அம்பிகாபதி வீதி,*
*சங்கானை.*
(38391) (24-17-16-18)

தகவல்:
**பொ.நித்தியானந்தன்** (மகன்)

### குமாரசிங்கம் மங்கையர்க்கரசி



கண்டி வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசிங்கம் மங்கையர்க்கரசி 30-07-2005 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற குமாரசிங்கத்தின் மனைவியும் கலையரசி (சுவிஸ்), சரவணபவன் (ஜேர்மனி), சண்முகபவன் (லண்டன்), காண்டீபன் (லண்டன்), கலைவாணி (வவுனியா), கலைச்செல்வி, சிறிகாந்தன் ஆகியோரின் அன்புத் தாயும் சிறிராசாசிங்கம் (சுவிஸ்), காந்தி (வவுனியா), சுதா (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும் சதீஸ், ஆரதி விதுஸ், கௌசிகன், கௌசிகா, வினோதினி, பிரசாந்தி, கிருஷாந்தி, சஞ்சைபவன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01-08-2005) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் சாவகச்சேரி இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*144, கண்டி வீதி,*
*சாவகச்சேரி.*
*0777170778* (சி/44153) (24)

தகவல்:
**கலையரசி** (மகள்),
**சிறிராசாசிங்கம்** (மருமகன்).

### விநாயகமூர்த்தி திருஞானசம்பந்தர் [சம்பந்தர்]



புளியங்கூடலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் காங்கேசன்துறையில் வசித்தவரும் தற்போது இல.18, பிரம்படி வீதி, கொக்குவிலை வசிப்பிடமாகக்கொண்டவருமான விநாயகமூர்த்தி திருஞானசம்பந்தர் 29-07-2005 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் விநாயகமூர்த்தி - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும் பாலசுப்பிரமணியம் (மலேசியா), சிவபாதசுந்தரம், சிவபாக்கியம், அமரர் இராஜரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் அமரர் ருக்குமணி மற்றும் செல்வரட்ணம்(செந்தூரன் களஞ்சியம்), நடராஜா, சிறிதரன், அமரர் சசிதரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் கிருபாகரன் (டென்மார்க்), பிரபாகரன் (லண்டன்),பிரேமா,சுதாஸ்கரன்(லண்டன்) அகியோரின் அன்புத் தந்தையும் கேதீஸ்வரி (டென்மார்க்),ராஜலட்சுமி(லண்டன்), உருத்திரகுமார் (கவி மோட்டர்ஸ்), சியாமினி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் சிவாஸ்கரன் (பல்கலைக்கழகம்), சிர்கான் (IOM), ரஜீலாதேவி (சிரேஷ்ட போதனாசிரியர், யாழ்.தாதியர் பயிற்சிப் பாடசாலை), ரேணுகா (ஆசிரியை, யாழ். கனகரட்ணம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் சிறியதந்தையும் பிரதீபன், பிரசன்யா, பிரதீபா, சாம்பவி, கவிந்தன், கௌசிகா, ருக்சிகா, நிருசிகா ஆகியோரது பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01-08-2005) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(38398) (24-18-15)

*இல. 18, பிரம்படி ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

தகவல்:
**திருமதி தி.மங்கையர்க்கரசி** (மனைவி).

**FIVE STAR**

CFL பல்புகளை மட்டும் வாங்குங்கள்
காரணம்:-



- ★ உண்மையான 80% மின்சார சேமிப்பு
- ★ குறைந்த மின்சாரத்தில் அதிக பிரகாசம்
- ★ 8000 இக்கு குறையாத ஆயுள்
- ★ உலக தராதர சான்றிதழ், ஒருவருட உத்தரவாதம்
- ★ வீட்டு உபகரணங்களை பாதிக்காது

அனுசரணை:-
**PRESIDENT CFL**
0777 306549 (38347)(52-17-16)

**மாணவர்களே! 50% கட்டணச் சலுகை**

SPECIAL OFFER FOR SCHOOL STUDENTS 50%

| கற்கை நெறிகள் | சலுகைக் கட்டணம் | காலம் |
|---|---|---|
| Dip in MS OFFICE | Rs.1500/= | 3 மாதம் |
| Dip in Desk Top Publishing | Rs.1500/= | 3 மாதம் |
| Dip in Hardware | Rs.1500/= | 4 மாதம் |
| Dip in Auto CAD | Rs.1500/= | 4 மாதம் |
| Dip in Internet & E - Mail | Rs.1000/= | 2 மாதம் |
| A/L GIT Program | Rs.20/= Per hour | 3 மாதம் |

| Levels | Age Level | Duration (hours) 03 Months | Monthly Fees |
|---|---|---|---|
| Level - 1 | 7to8 | 2 hrs x 2 days per week | Rs. 500/= |
| Level - 2 | 9+ | 2 hrs x 2 days per week | Rs. 500/= |
| Level - 3 | 10+ | 2 hrs x 2 days per week | Rs. 500/= |
| Level - 4 | 11+ | 2 hrs x 2 days per week | Rs. 500/= |
| Level - 5 | 12+ | 2 hrs x 2 days per week | Rs. 500/= |
| Level - 6 | 13+ | 2 hrs x 2 days per week | Rs. 500/= |
| Level - 7 | 14+ | 2 hrs x 2 days per week | Rs. 500/= |
| Level - 8 | 15+ | 2 hrs x 2 days per week | Rs. 500/= |

C.B Computer Academy
Station Road,
Kondavil.
T.P No. 021- 4590291

மேற்படி கற்கை நெறிகள் யாவும் 05.08.2005 அன்று ஆரம்பமாக இருப்பதனால் உங்கள் பதிவுகளை விரைவாக மேற்கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கே.ஸி.ஸி.ஸி.கிண்ணக் கிரிக்கெட்

## யாழ்.பல்கலைக்கழக அணிக்கு 220 ஓட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.1

யாழ்.பல்கலைக்கழக வி.க. அணிக்கும் ஜொலிஸ்ரார் வி.க. அணிக்கும் இடையில் நடைபெற்ற கால் இறுதி ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணி வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.பல்கலைக்கழக அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 220 ஓட்டங்களைப் பெற்றது.

மணிவண்ணன், அருள்ராஜ், சர்வானந்தன், யதார்த்தனன், ஜயந்தன் ஆகியோர் முறையே 81, 33, 27, 20, 11 ஓட்டங்களை தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

நாதன், கோபிநாத் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் முரளி 2 விக்கெட்டுக்களையும் சயிலேஸ்வரன், லக்ஸ்மிகாந் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் வி.க. அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றது.

லக்ஸ்மிகாந், கே.யதுகுலன், சையிலேஸ்வரன், அருண்குமார் ஆகியோர் முறையே 24, 21, 17, 15 ஓட்டங்களையும் முரளி ஆட்டம் இழக்காமல் 18 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

யதார்த்தனன் 3 விக்கெட்டுக்களையும் நிஷாந்தன், அருள்ராஜ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் சர்வானந்தன், செந்தூரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (3-190)

# கூடைப்பந்தாட்டத்தில் வெற்றிபெற்ற அணிகள்

யாழ்ப்பாணம்,ஓக.1

தமிழீழ மாணவர் அமைப்பு, தமிழீழ விளையாட்டுத்துறை ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் யாழ்.இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் நடத்தி வரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மேலும் வெற்றிபெற்ற அணிகளின் விவரம் வெளியாகியுள்ளது.

✱ஜொனியன்ஸ் வி.கவும் உடுவில் வி.கவும் மோதியதில் ஜொனியன்ஸ் வி.க: 58:28 என்ற புள்ளி அடிப்படையில் உடுவில் வி.கவை வென்றது.

✱சென்றலைட்ஸ் வி.கவும் கோப்பாய் வி.கவும் மோதியதில் சென்றலைட்ஸ் வி.க. 63:32 என்ற புள்ளி அடிப்படையில் கோப்பாய் வி.கவை வெற்றிகொண்டது.

✱சென்றலைட்ஸ் வி.கவும் ஓல்கோல்ட்ஸ் வி.கவும் மோதியதில் ஓல்கோல்ட்ஸ் வி.க. 41:31 என்ற புள்ளி அடிப்படையில் சென்றலைட்ஸ் வி.கவை வென்றது.

✱கோப்பாய் வி.கவும் ஜொனியன்ஸ் வி.கவும் மோதியதில் ஜொனியன்ஸ் வி.க. 53:34 என்ற புள்ளி அடிப்படையில் கோப்பாய் வி.கவை வெற்றிபெற்றது. (3-190-203)

# பற்றீஸியன்ஸ் வி.க. வென்றது

சென்றலைட்ஸ் வி.கவுக்கும் பற்றீஸியன்ஸ் வி.கவுக்கும் இடையில் நடைபெற்ற கால் இறுதியாட்டத்தில் பற்றீஸியன்ஸ் வி.க. வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் வி.க. 8 விக்கெட்டுக்களை இழந்து 175 ஓட்டங்களைப் பெற்றது.

சுதர்சன், மதூசன், பிரிந்தாவன், கார்த்தீபன், நிஷாந்தன் ஆகியோர் முறையே 49, 23, 22, 16, 15 ஓட்டங்களை தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பார்த்தீபன் 4 விக்கெட்டுக்களையும் விநோதன் 2 விக்கெட்டுக்களையும் முகுந்தன், லொயிட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பற்றீஸியன்ஸ் வி.க. அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 177 ஓட்டங்களைப் பெற்றது.

முகுந்தன், லயினஸ், லொயிட், சுஜீவன் ஆகியோர் முறையே 30, 29, 24, 21 ஓட்டங்களையும் பார்த்தீபன் ஆட்டம் இழக்காமல் 32 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பிரகாஸ் 3 விக்கெட்டுக்களையும் பிரசாத் 2 விக்கெட்டுக்களையும் சாள்ஸ், யசிந்தன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (3-190)

## நீர்கொழும்பில் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.1

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் 15 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் நீர்கொழும்பில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்றுவதற்காக யாழ்.மாவட்ட அணியினர் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நீர்கொழும்பு செல்லவுள்ளனர். (ஐ-190)

## தேசிய மட்டத்துக்கு தெரிவானோர்



வவுனியாவில் நடந்த மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில் யாழ். புனித ஜோன். பொஸ்கோ மாணவன் மகாநாதன் கௌரங்கன் ஆரம்பப் பிரிவு நீளம் பாய்தலில் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (3)

✱ ✱ ✱



மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில்19 வயது ஆண்கள் பிரிவில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவன் செல்வராசா நவநீதன் கோல் ஊன்றிப் பாய்தலில் முதலிடம் பெற்றார்.

அவர் 3.10 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து சாதனை படைத்ததுடன் தேசிய மட்டத்துக்கும் தெரிவானார். (3-190)

✱ ✱ ✱



மாகாண மட்டப் போட்டிகளில் ஆண்களுக்கான 17 வயதுப் பிரிவில் 1500 மீற்றர் ஓட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி மாணவன் எஸ்.வியாசன் இரண்டாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளார். (3-190)

✱ ✱ ✱



மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் ஆண்களுக்கான 15 வயதுப் பிரிவில் உயரம் பாய்தல் போட்டியில் கண்டாவளை ம.வியைச் சேர்ந்த பா.தனுசாந் இரண்டாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளார்.

கிளிநொச்சி வலயத்தில் இருந்து 16 மாணவர்கள் இந்த விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றியிருந்தனர். இவர்களில் தனுசாந் தேசிய மட்டத்துக்கு தெரிவானார். (3-352)

## முன்பள்ளி விளையாட்டு நிகழ்வில்...





சண்டிலிப்பாய் கல்வளை பாரதி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றபோது மாணவர்கள் ஒலிம்பிக் தீபமேற்றுவதையும், முன்பள்ளியின் ஆசிரியருக்கு ஊக்குவிப்புப் பரிசினை நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் வழங்குவதையும் படங்களில் காணலாம். (3-13)



மானிப்பாய் மேற்கு திருவள்ளுவர் சனசமுக நிலைய முன்பள்ளியின் விளையாட்டு விழாவில் மாணவர்களின் நடன நிகழ்வுக்காட்சி. (படம்: மானிப்பாய் செய்தியாளர்.)



வடக்கு-கிழக்கு முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தின் சண்டிலிப்பாய் பிரதேச ஆனைக்கோட்டை குடும்ப முன்பள்ளி சிறார்களின் வருடாந்த விளையாட்டுவிழா ஆனைக்கோட்டை பால[illegible] மைதானத்தில் நடைபெற்றது. இதில் மாணவர்கள் பந்துப் பரிமாற்றல் [illegible] கலந்துகொண்ட போது எடுக்கப்பட்ட படம். (3-13)

## இளவாலையில் கரபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.1

இளவாலை வெண்புறா விளையாட்டுக் கழகம் கரபந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் இளைப்பாறிய அதிபர் அமரர் சிவகுருநாதன் ஞாபகார்த்தமாகக் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

இப்போட்டிகளில் பங்குபற்றவிரும்பும் யாழ்.விளையாட்டுக் கழகங்கள் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் இளவாலை காந்தி கல்வி நிலையத்திற்கு தமது விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (203)

## முன்பள்ளியின் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஓக.1

சண்டிலிப்பாய் தென்னிந்தியத் திருச்சபையின் முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டு விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் திருச்சபை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இணுவில் தேவகிராம திருச்சபை சேகரகுரு வணபிதா.ஜே.தேவஅருட்செல்வம் பிரதம விருந்தினராகவும், சண்டிலிப்பாய் மேற்கு கிராம அலுவலர் லோ.அருள்ராஜ், குடும்பசுகாதார சேவை உத்தியோகத்தர் திருமதி ச.பவளலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (3-13)

## விக்னேஸ்வரா வெற்றியீட்டியது

யாழ்ப்பாணம்,ஓக.1

அரியாலை சனசமூக நிலையத்தின் 56ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நவகலா நிறுவனத்தின் ஆதரவுடன் நடைபெற்றுவரும் மின்ஒளியிலான கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடந்த ஆட்டம் ஒன்றில் அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் 25:14, 21:25, 26:24 25:22, என்ற புள்ளி வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. (3-190)

## மகளிர் ஆஷஸ் கிரிக்கெட் அடுத்தவாரம் ஆரம்பம்

கொழும்பு,ஓக.1

ரிக்கி பொன்டிங் தலைமையிலான ஆஸ்ரேலிய அணியும் மைக்கல் வோகன் தலைமையிலான இங்கிலாந்து அணியும் ஆஷஸ் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் நிலையில் மற்றொரு ஆஷஸ் கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 9 ஆம் திகதி இங்கிலாந்தில் ஆரம்பமாகவுள்ளது.

ஆஸ்ரேலியா - இங்கிலாந்து மகளிர் கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான சுற்றுப் போட்டியே ஆஷஸ் கிரிக்கெட் தொடராகும். (203)

## விளையாட்டு

### கூடைப்பந்தாட்ட அரையிறுதியாட்டங்கள்

தமிழீழ மாணவர் அமைப்பு, தமிழீழ விளையாட்டுத்துறை ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்திவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் அரையிறுதியாட்டங்கள் நாளையும் நாளை மறுதினமும் யாழ். இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் நடைபெறவுள்ளன.

✱ நாளை செவ்வாய்க்கிழமை- மாலை 4மணி - பெண்கள்- யாழ்.பல்கலைக்கழக வி. க.எதிர் உடுவில் வி.க.

✱ மாலை 5மணி- ஆண்கள்- ஜொலிஸ்ரார் வி.க. எதிர் ஜொனியன்ஸ் வி.க.

✱ நாளை மறுதினம் புதன்கிழமை- பெண்கள்- மாலை 4மணி- கொக்குவில் மத்திய சனசமூக நிலைய வி.க எதிர் பட்டபிளை வி.க.

✱ மாலை 5மணி - சென்றலைட்ஸ் (சொக்ஸ்) வி.க.எதிர் ஓல்கோல்ட்ஸ் வி.க.

இப்போட்டிகளில் வெற்றிபெறும் அணிகள் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள இறுதியாட்டத்தில் மோதவுள்ளன.

இப்போட்டிகளை மின்ஒளியில் நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டிக் கௌரவிப்பு

சாவகச்சேரி, கல்வயல் ஆயிலடி புலுட்டையன் வீரகத்தி விநாயகர் தேவஸ்தான முதலாம் மகோற்சவ தினத்தில் இருந்து 'விநாயகர் திருவருள்' என்னும் பொருள் பற்றி தொடர் சொற்பொழிவு ஆற்றிய வரணியூர் சைவப் புலவரும் சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆசிரியருமான சி.கா.கமலநாதன் தேர்த்திருவிழாவன்று மாலை ஆலய நிர்வாகத்தினரால் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டார். (3-170)




வாழும் கலைப் பயிற்சி கோண்டாவிலில்
இலவச அறிமுக உரை

நாள்: 01.08.2005 திங்கட்கிழமை மாலை 6 மணி
இடம்: இந்து மகா வித்தியாலயம் புகையிரத நிலைய வீதி, கோண்டாவில்.
பயிற்சி நாள்கள்: 02.08.2005 முதல் 07.08.2005 வரை மாலை 6 மணிமுதல் 8 மணிவரை.
மேலும் தொடர்புகளுக்கு: 077 9059549, 222 3526.

திங்கள் மாலை 5 மணிக்கு மானிப்பாய் மகளிர் கல்லூரியில் (01.08.2005) நடைபெறும் பஜனை மற்றும் தியான நிகழ்ச்சிக்கு அனைவரையும் வரவேற்கிறோம்.

அன்பில் மலருங்கள் அனைவரும் வருக! உங்களை உணருங்கள்
www.artofliving.org (38124) www.srisriravishankar.org

PRESIDENT CFL
பல்புகள் இப்போது
இலகு தவணையில் கிடைக்கும்
- SLS இன் FIVE STAR தரச்சான்று
- DNY Norway யின் Iso 9000 சான்று
- 8000 Hours Life time
- President Lighting Singapore நிறுவனத்துடன் சேர்ந்து ஏற்றுமதிக்காகத் தயாரிக்கப்பட்டது.
- இலங்கை உற்பத்தி ஒரு வருட உத்தரவாதம்.

உங்களது விலாசத்தை உறுதிப்படுத்தும் இறுதிமாத மின்சாரப் பட்டியலுடன் அடையாள அட்டையும் கொண்டு வரவேண்டும். (38346)(26.14.15)
தொடர்பு: Light Line,
530, K.K.S. Road, Jaffna. T.P.: 0777 224556.

ஸ்ரீ கருமாரி அம்மன் ஜோதிட நிலையம்
பண்டித் சுவாமிநாதன்

உலகத்தில் உங்களுக்கு ஏற்படும் இன்பம், துன்பம், நன்மை, தீமைகள் என்பவற்றைக் கூறுவார். இவரை ஒரு முறை சந்தியுங்கள்! கைரேகை, குடும்பத்தில் கணவன் - மனைவிக்கிடையே உள்ள பிரச்சினை, கல்வி, வீடு, நிலம், பூமி, தொழில், வெளிநாட்டுப் பிரயாணம், வியாபாரம், இலட்சுமி கடாட்சம், திருமணம், குழந்தைப் பாக்கியம், காதல் விவகாரம், எதிரிகளால் ஏற்படும் பிரச்சினை, ஆரோக்கியம், பிணி நோவுகள், பணக் கஷ்டம், நீதிமன்ற வழக்குகள், மந்திரம், சூனியம், செய்வினை ஆகிய சகல காரியமும் பார்க்கப்படும்.
சந்திக்க வேண்டிய நேரம்: காலை 8 மணி முதல் இரவு 7 மணி வரை
தொடர்புகளுக்கு: APAT கெஸ்ற் கவுஸ்
43(75), கண்டி வீதி (கச்சேரிக்குச் சமீபம்), சுண்டிக்குளி.
T.P.: 0777 738221 (38362)(29.14.15.26)

'மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்'
சிவபூமி பாடசாலை
(சிறுவர் மனவிருத்திப் பாடசாலை)
முதலாம் ஆண்டு நிறைவுவிழா

காலம்: 01-08-2005 திங்கட்கிழமை மாலை 3 மணி
இடம்: சிவபூமி பாடசாலை, கோண்டாவில்.
தலைமை: செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன். (தலைவர், சிவபூமி அறக்கட்டளை)
பிரதமவிருந்தினர்: திருவாளர் சூரிப்பிள்ளை பாலசிங்கம் தம்பதிகள் (கணக்காளர், ஐக்கிய இராய்ச்சியம்)
சிறப்புவிருந்தினர்: திருமதி S.தெய்வேந்திரம் (பிரதேச செயலர், நல்லூர்)
திருமிகு ம.ஜெயசீலன் தம்பதிகள் (தொழிலதிபர், லண்டன்)
கௌரவவிருந்தினர்: கவிஞர் புதுவை இரத்தினதுரை (பொறுப்பாளர், கலை பண்பாட்டுக்கழகம்)
ஆசியுரை: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் (நல்லை ஆதீன முதல்வர்)
வாழ்த்துரைகள்: கலாநிதி சி.சிவலிங்கராஜா (தலைவர், தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
பேராசிரியர் வி.நித்தியானந்தன் (தலைவர், பொருளியல்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
திரு.சி.சுந்தரேஸ்வரன் (முகாமையாளர், HNB சுன்னாகம்)
வைத்தியநிபுணர் இ.கணேசமூர்த்தி (யாழ்.போதனா வைத்தியசாலை)
நிறைவுரை: திருமிகு ந.சதாசிவஐயர் (செயலாளர், சிவபூமி அறக்கட்டளை)
தொடர்ந்து சிவபூமி மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெறும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். நிர்வாகசபை, சிவபூமி. (சி-44148) (14-26-15)


## மரண அறிவித்தல்

### பரராஜசிங்கம் சோமசுந்தரம்



(துறைமுகக்கூட்டுத்தாபன பாதுகாப்பு உத்தியோகத்தர், திருகோணமலை)

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டி, சமரபாகு தேவன்குறிச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட பரராஜசிங்கம் சோமசுந்தரம் அவர்கள் 29-07-2005 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பரராஜசிங்கம் - கண்மணி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகரத்தினம் யோகம்மாவின் அன்பு மருமகனும் இரத்தினதேவியின் அன்புக் கணவரும் சுதாசினி, சுதாபரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் நிருபலிங்கத்தின் (சுதா) அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01-08-2005) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

சமரபாகு, தேவன்குறிச்சி, உடுப்பிட்டி.
T.P.: 0777 294249

தகவல்: நிருபலிங்கம் - மருமகன் (38386) (14-26-15)

## இன்று பிறக்கும் குழந்தைகளுக்குச் சேமிப்புக்கணக்கு

தென்மராட்சி, ஓக.1

ஓகஸ்ட் முதலாம் திகதி பிறக்கும் குழந்தைகளுக்கு இலங்கை வங்கி 500 ரூபா பெறுமதியான சேமிப்புக் கணக்கைத் தனது செலவில் ஆரம்பிக்கவுள்ளது.

இலங்கை வங்கியின் 66 ஆண்டு பூர்த்தியையொட்டி இத்திட்டம் சகல கிளைகளிலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

ஓகஸ்ட் முதலாம் திகதி பிறக்கும் குழந்தைகளின் விவரங்களை ஓகஸ்ட் 31 ஆம் திகதிக்கு முன்னர் தத்தமது பகுதியிலுள்ள இலங்கை வங்கிக்கிளையில் பதிவுசெய்து சேமிப்புக் கணக்குப் புத்தகத்தினைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (3-117)

## முல்லை. வங்கியில் விசேட நிகழ்வு

புதுக்குடியிருப்பு, ஓக.1

இலங்கை வங்கியின் 66 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு முல்லைத்தீவுக் கிளையில் இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்குப் பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

நிகழ்வில் சர்வமத பிரார்த்தனை, ஆர்.ஜே.ஜி.கணக்கில் புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு என்பன இடம்பெறவுள்ளன.

முள்ளியவளை 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த வி.காயத்திரிக்கு 10 ஆயிரம் ரூபா பணப்பரிசில் வழங்கப்படவுள்ளது.

அன்றையதினம் பிறக்கும் சகல பிள்ளைகளுக்கும் 500 ரூபா வங்கியிலிட்டு வைப்புப் புத்தகம் வழங்கப்படவுள்ளதாக கிளை முகாமையாளர் க.லட்சுமணசர்மா தெரிவித்தார். (3-353-202)

## திட்டப் பணிப்பாளர்களாக பட்டதாரிகள் நியமனம்

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளுக்குத் திட்டப் பணிப்பாளர்களாகப் பட்டதாரிகள் நியமிக்கப்படவுள்ளனர். வடக்கு - கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் இ.விசாகலிங்கம் இதனைத் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளிலும், திணைக்களங்களிலும் பயிற்சிப் பட்டதாரிகளாகக் கடமையாற்றுவோருக்கு நடத்தப்பட்ட போட்டி பரீட்சைகளின் அடிப்படையில் 629 பேர் தமிழ்மொழி மூல பாடசாலைகளுக்கு மேற்படி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

வடக்கு- கிழக்கு மாகாணத்திலுள்ள தேசிய பாடசாலைகளில் மத்திய கல்வி அமைச்சு ஏற்கனவே திட்ட உதவியாளர்களாகவும் நிதியுதவியாளர்களாகவும் 72 பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-152)

## உலக உணவுத் திட்ட வேலைகள் ஆரம்பம்

தென்மராட்சி, ஓக.1

உலக வங்கியின் உதவியுடன் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உலர் உணவுத் திட்ட வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

நகரசபையினால் முன்வைக்கப்பட்ட வேலைத் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவும் அந்தந்தப்பகுதிப் பொது அமைப்புக்கள் மூலம் அவை மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த வேலைத் திட்டங்களை மேற்கொள்ளவுள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் நாளைமறுதினம் சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் நடைபெறு[illegible] நகரசபைச் செயலாளர் திருமதி குணமணிதேவி ஆறுமுகம் தெரிவித்தார். (3-117)


நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்கின்றேன்

வரணியைச் சேர்ந்த யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி கல்வியியலாளர் திரு.முருகேசு ஆனந்தராசா அவர்கள், என்னால் தவறவிடப்பட்ட பெறுமதிமிக்க பணப்பை மற்றும் ஆவணங்களைக் கண்டெடுத்து நேர்மையாக நல்கியமைக்காக நன்றியைத் தெரிவிப்பதோடு, பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.
உரிமையாளர்,
திரு.த.சத்தியசீலன்,
சத்தியா வோச் அன்ட் றேடியோ வேக்ஸ்,
கச்சாய் வீதி, சாவகச்சேரி. (38384)

மருந்து விற்பனையாளர் தேவை

ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். (அனுபவம் உள்ளவர்களும்/பழகவிரும்புபவர்களும்)
[illegible]
(38382)



அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

| சீட்டிழுப்பு வாரம் | 700 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு |
|---|---|---|
| திகதி | 29-7-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. 5583413-5599650 |

வெற்றி இலக்கங்கள்
24 28 49 54

லக்கினம் தனுசு

ஜக்பொட் பரிசு ரூபா.10,00,000/- வெல்லப்படவில்லை
இந்த செவ்வாய்க்கிழமை ரூபா. 17,96,550/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,56,674 | 10/- | 35,66,740/- |
| 2.இலக்கங்கள் | 32,682 | 20/- | 6,53,640/- |
| 1.இல லக்கினம் | 32,450 | 30/- | 9,73,500/- |
| 2.இல லக்கினம் | 3,023 | 100/- | 3,02,300/- |
| 3.இலக்கங்கள் | 875 | 500/- | 4,37,500/- |
| 3.இல லக்கினம் | 88 | 5,000/- | 4,40,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இலக்கங்கள் | - | 10,00,000/- | - |
| | | மொத்தம் | 67,73,680/- |
| மோட்டார் முச்சக்கர வண்டி | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 78,25,930/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 78,25,930/-
தொடர் இல. 4641914 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2005 ஆகஸ்ட் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்றல் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மட்டக்களப்பு | 5588367-7-22 |
| கொழும்பு | 5596384-5-39 |
| கொழும்பு | 5585575-9-31 |
| காலி | 5583419-3-54 |
| அனுராதபுரம் | 5590000-8-88 |


## கேள்வி அறிவித்தல் - 2005

### வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரினால் 2005ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றையதினமே முற்பகல் 11.30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| இல. | பாடசாலையின் பெயரும் வேலை விவரமும் | மீளளிக்கப் படாத வைப்புப் பணம் | மீளளிக்கப் படும் வைப்புப் பணம் | இக்ராட் இலக்கம் |
|---|---|---|---|---|
| 01 | யா/இடைக்குறிச்சி சிறிசுப்பிரமணிய வித்தியாலயம். [I] மலசலகூடத் திருத்த வேலை [10 பகுதிகள்] | ரூபா 250/- | ரூ. 700/- | தரம் 9 |
| | [II] அதிபர் அறை புனரமைத்தல் | ரூ. 500/- | ரூ. 2650/- | தரம் 9 |
| | [III] நீர் விநியோகம் | ரூ. 100/- | ரூ. 200/- | தரம் 9 |
| | [IV] உத்தியோகத்தர்களுக்கான மலசலகூடத் திருத்தம் | ரூ. 100/- | ரூ. 260/- | தரம் 9 |
| | [V] வகுப்பறைகள் அமைத்தல் | ரூ. 250/- | ரூ. 700/- | தரம் 9 |
| 02 | யா/மட்டுவில் கமலாசனி வித்தி. [i] அதிபர் அறை, ஆசிரியர் அறை புனரமைத்தல் | ரூ. 250/- | ரூ. 4200/- | தரம் 9 |
| | [ii] நீர் விநியோகம், மலசலகூடத் திருத்தம், வகுப்பறைகள் அமைத்தல் 60X 20 | ரூ. 250/- | ரூ. 2030/- | தரம் 9 |
| 03 | யா/மிருசுவில் றே.க.த.க.பா. மேல்மாடி அமைத்தல் [60'X25'] | ரூ. 500/- | ரூ. 11,000/- | தரம் 8 |

01. அ) மேற்படி வேலைக்கு இக்ராட் (ICTAD) நிறுவனத்தின் 09ஆம், அதற்கு மேற்பட்ட தரத்திற்குப் பதிவுசெய்து கொண்டவர்கள் விண்ணப்பிக்கத் தகுதிபெற்றவர்களாவர்.
ஆ) பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தங்களால் இவ்வேலையைச் செய்து முடிக்க முடியுமானால் தங்கள் பாடசாலைக்குரிய கேள்விப்பத்திரங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம். பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு முதலாம் பந்தி 'அ' இல் குறிப்பிட்ட சட்ட திட்டமும் மீளளிக்கக்கூடிய, மீளளிக்க முடியாத வைப்புப் பணமும் விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது.
02. கேள்விப் பத்திரங்களில் பெறுமதி சேர்வரி (VAT) 15%, சேர்க்கப்பட்ட கேள்வித்தொகை பெறுமதி சேர்வரி (VAT) 15%, சேர்க்கப்படாத கேள்வித்தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.
03. மேற்படி வேலைக்கான கேள்விப் பணத்தைத் தென்மராட்சிக் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்து அல்லது இக்காரியாலயத்தில் நேரடியாகச் செலுத்தி 01.08.2005 ஆம் திகதியிலிருந்து 09.08.2005 ஆம் திகதி நண்பகல் 12மணி வரை தென்மராட்சிக் கல்வி அலுவலகப் பாடசாலை வேலைகள் கிளையில் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
04. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்திசெய்து மூலப்பிரதியும் எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும் கையொப்பம், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும் கேள்விப்பத்திர இணைப்பிரதியினையும் தனித்தனி இரு கடித உறைகளில் இட்டு கடித உறையில் இடப்புற மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையிலிட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் 2005 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 11 மணிக்கு முன்னர் இடப்படவேண்டும். மேற்குறிப்பிட்ட காலநேரத்திற்குப் பிந்திய கேள்விப் பத்திரங்கள் எக்காரணங்கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
05. தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரர் தெரிவுசெய்யப்படும் திகதியிலிருந்து 03 மாத காலத்திற்குள் அனைத்து வேலைகளையும் பூர்த்திசெய்து கையளிக்கவேண்டும். எதுவித கால தாமதங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. சரியாக நிரப்பப்படாத, பிழைகள் கூடிய, தெளிவற்ற கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
06. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன், மேலதிக விவரங்களைப் பாடசாலை வேலைகள் கிளையிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பாடசாலை வேலைகள் கிளை,
வலயக் கல்வி அலுவலகம்,
தென்மராட்சி.

திருமதி
றெ.இருதயநாதன்,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சி.

(சி-44129)(26-14-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| ராகு | செவ். | சந். | |
| | இராசிச் சக்கரம் | | சூரி. புதன் சனி |
| | | | வெள். |
| | | | வியா. கேது |

# இந்த வார இராசி பலன்

## 31.07.2005 - 06.08.2005

**மாற்றம்:**
*31-07-2005இல் ரோகிணி - இடபத்தில் சந்திரன் நிற்கும்.*
ஸ்ரீலங்காவின் அரசியலில் ஐ.நா. சபை, உலக நாடுகளின் சமாதான அழுத்தங்களும் அரசியல்வாதிகளின் பிடிவாத நிலையும் அதனால் இழுபறிநிலையும் தோன்றும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

**பி**றர் உங்களைப் பற்றிக் குறை சொல்லுகிறார்கள். உடல் நிலையில் பாதிப்பு வரலாம். பிள்ளைகள், சகோதரங்களுக்குச் செலவுகள் அதிகரிக்கும். விஷபீடைகள் ஏற்படலாம். கட்டுமீறிய செலவுகள் ஏற்படும். கண் கூச்சம், காயங்கள், பிரிவுத் துக்கம் என்பன வரத்தான் செய்கின்றன. வியாபாரிகள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, திங்கள், புதன்.*

### இடபம்

**ப**ண வரவு ஏற்படும். வாய்ச்சாதுரியத்தால் நன்மைகள் ஏற்படும். காணி பூமிச் சிறப்புக் கொடுக்கும். தொழில் ஸ்தானத்தில் நன்மைகள் ஏற்படும். நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். கண், காது வருத்தம், வாத பித்தச் சுகவீனங்கள் கொடுக்கும். சங்கீதம், வீடியோ வகையானவர்கள் நற்பலன் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன்.*

### மிதுனம்

**அ**டிக்கடி கோபம். கடும் பிடிவாதம். வாகன, அரசகெடுபிடி. ஏமாற்றங்கள். ஆசைப்பட்டுத் துன்பம் அடைவீர்கள். இடமாற்றங்களால் நன்மைகள் ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் திட்டமிட்ட மாற்றங்கள் ஏற்படுத்தப்படும். ஆசிரியர்கள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், சனி.*

### கடகம்

**வெ**ளிநாட்டு வாய்ப்பு அல்லது அங்கிருந்து செய்தி, பண வரவுகள் வர இடமுண்டு. திடீர் மனஸ்தாபங்களால் நண்பர்களுடன் பகைமை ஏற்படலாம். ஆசிரியத்துறை, அரசியல், சட்டத்துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள். வயிற்று நோ கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், சனி.*

### சிங்கம்

**ப**ண வரவு ஏற்படும். எதிர்ப்பாலாரின் உதவிகளால் நன்மைகள் ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் நன்மைகள் கொடுக்கும். இடாம்பீகப் பொருள்களின் வரவுகள் ஏற்படும். சங்கீதம் சம்பந்தமான செலவுகள் அதிகரிக்கும். நண்பர்கள் கெடுதி செய்வார்கள். அவமானப்பட இடமுண்டு. பிரயாணத்தில் சில சமயம் காயங்கள் வரலாம்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், சனி.*

### கன்னி

**க**ஷ்டங்களை அனுபவித்து ஞானம் வரும் காலமாகும். வீட்டில் பேச்சு - வெளி உலகில் மூச்சு விடாத நிலை. தொழில் ஸ்தானத்தில் புதிய திட்டங்கள் உருவாகும். படிப்படியாகப் பணவரவு அதிகரிக்கும். பெற்றோர் வழி உதவிகள் கிடைக்கும். நாரி உளைவு வரும். வியாபாரிகளுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், சனி.*

### துலாம்

**ந**ண்பர்கள் கெடுதிகள் செய்வார்கள், சட்டத்துறையினர்கள், வியாபாரிகள் புதிய திட்டமிட்டுப் பொருள் தேடுவார்கள். வீட்டில் புறுபுறுப்புத்தான். ஆனால் இதையெல்லாம் பெரிதாக எடுக்காமல் நேர்வழியில் செயற்பட்டபடி இருப்பீர்கள். கால் உளைவு, சளிதொல்லை தரும்.

*அதிஷ்டநாள்கள்: திங்கள், சனி.*

### விருச்சிகம்

**க**ண்டபடி விதண்டாவாதம் செய்து பிறரின் வெறுப்புக்களுக்கு ஆளாகாதீர்கள். பொருள் விஷயத்தில் பயம், யோசனை மிகும். தெய்வவழிபாடு முக்கியம். சலவருத்தம் கால்நோ உளைவு கொடுக்கும். காணி, பூமி சம்பந்தமான சட்டநடவடிக்கையில் ஈடுபடநேரிடும். விவசாயம் முன்னேறும். காவல் துறையினர் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், சனி.*

### தனுசு

**கோ**பத்தால் எதையும் சாதிக்கமுடியாது. எதிர்பாலாருடன் வாக்குக் கலக்கம் ஏற்படும். பொதுத் தொண்டில் வீண்பழி வரும். இடமாற்றமொன்று ஏற்பட யோசனைவரும். கண் வலி, உஷ்ண பீடைகள் வருத்தும், வயிற்று நோ வரலாம். தொழில் ஸ்தானத்தில் புதிய திட்டங்கள் உருவாகும். ஆசிரியர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, திங்கள், புதன், சனி.*

### மகரம்

**கு**டும்பத்தில் கருத்து வேற்றுமை ஏற்படும். தாயாலோ மனைவியாலோ அவர்களின் சுகவீனத்தால் கவலைப்பட நேரிடும். பொருள் நிலையில் சுகம் கொடுக்கும். நாரி உளைவு, உரசல் காயங்கள் வர இடமுண்டு. விவசாயிகளுக்கும் கடல் தொழிலாளர்களுக்கும், வாகனப் பிரயாணத்துறையினர்களுக்கும் நன்மைகள் ஏற்பட இடமுண்டு.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, திங்கள், புதன்.*

### கும்பம்

**தி**ட்டமிட்ட பழைய அலுவல்கள் நிறைவேற இடம் உண்டு. பிராயாணச் செலவுகள் அதிகரிக்கும். வயிற்றில், காலில் நோக்கள் ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் வீண் செலவுகள் ஏற்படும். இடமாற்றத்தில் களவு ஏற்படலாம். உறவினர், நண்பர்கள் பொருள் செலவுகள் அதிகரிக்கும் நிலை ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, திங்கள்.*

### மீனம்

**கா**லசர்ப்ப குண்டல நிலை உங்களுக்கு போகுமிடமெல்லாம் வேதனை. புத்திரர்நிலையால் ஆறுதல் ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் கலகம் இருந்தாலும் நல்லபலன்களும் நடக்கும். புதிய துறையில் அல்லது புதிய திட்டங்களால் நற்பலன்கள் அதிகரிக்கும். மருந்தாளர்கள், ஆசிரியர்கள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, திங்கள், சனி.*

**நவா ஜோதிடம்**

---

# பிரஜா உரிமைச் சட்டத்தை எதிர்த்தே வாக்களித்தார் ஜி.ஜி.

## தமிழ் காங்கிரஸ் தலைவர் சொல்கிறார்

நாற்பத்தொன்பது வருடங்களுக்கு முன்னர் இலங்கை நாடாளுமன்றத்தில் சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டம் நிறைவேறிய ஜூன் பதினைந்தாம் திகதியன்று, அப்போதைய அரசியல் பின்னணியை விவரித்து கட்டுரை ஒன்றை 'உதயன்' (15.06.2005) இதழில் கஜனி எழுதியிருந்தார்.

அக்கட்டுரையில், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் நிறுவுநர் தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலம் குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

கட்டுரையில் குறித்த பகுதி பின்வருமாறு அமைந்திருந்தது:-

> 1948ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதியில் இலங்கை சுதந்திரமடைந்தது. பொதுத் தேர்தலும் நடைபெற்றது. டி.எஸ்.சேனநாயக்கா தலைமையிலான அரசு அமைக்கப்பட்டது. அந்த அரசில் தமிழ்க் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஜி.ஜி. பொன்னம்பலம், அடங்காத் தமிழன் சி.சுந்தரலிங்கம் ஆகியோர் அமைச்சர்களாக இருந்தனர். சுதந்திரமடைந்த கையோடு ஆளுங்கட்சியினரிடையே வகுப்பு வாத உணர்வு தலைதூக்கத் தொடங்கியது. தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் நோக்கில் அரசு 1949ஆம் ஆண்டில் இந்திய - பாகிஸ்தானியப் பிரஜாவுரிமைச் சட்டத்தைக் கொண்டுவந்து நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியது. இதன் பயனாக மலையகப் பகுதிகளில் இருந்து நாடாளுமன்றத்திற்குத் தமிழ்ப் பிரதிநிதிகள் தெரிவாவது தடைப்பட்டது. அரசின் உள்நோக்கத்தைப் புரிந்துகொண்ட எஸ்.ஜே.வி. செல்வநாயகம், வன்னியசிங்கம் ஆகியோர் தமிழ்க் காங்கிரஸிலிருந்து வெளியேறி தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தனர். ஆனால், ஜி.ஜி. பொன்னம்பலம் மற்றும் சி.சுந்தரலிங்கம் ஆகியோர் தொடர்ந்து அமைச்சர் பதவிகளை வகித்தனர்.
>
> அதேநேரம், விவசாய அபிவிருத்தி என்ற போர்வையில் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க மின்னேரியா, மினிபே மற்றும் கல்லோயாப் பிரதேசங்களில் பாரிய குடியேற்றத் திட்டங்களை உருவாக்கி, அங்கு சிங்களவர்களைக் குடியேற்றினார். இதனால், தமிழர் தாயகப் பிரதேசங்கள் பறிபோக ஆரம்பித்தன. அப்போது எம்மவர்கள் அமைச்சர்களாகப் பதவி வகித்தனர்.

இது குறித்து அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் இப்போதைய தலைவர் அ.விநாயகமூர்த்தி 'உதயனு'க்கு அனுப்பிய கடிதத்தில் பின்வருமாறு தெரிவிக்கிறார்.

1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட அரசின் மந்திரி சபையில், அமரர்கள் சுந்தரலிங்கம், ஜி.ஜி.பொன்னம்பலம் ஆகியோர் அங்கத்தவர்களாக இருந்தார்கள் எனக் கஜனி குறிப்பிட்டிருந்தார். இது தவறானதாகும். மந்திரி சபை அமைக்கப்பட்டபோது ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்கள் எதிர்க்கட்சியிலேயே இருந்தார்.

பின்பு அப்போதைய பிரதமர் டி.எஸ். சேனநாயக்கா அவர்களுடன் நடந்த பேச்சு அடிப்படையில் எதிர்வினை ஒத்துழைப்பு வழங்கத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி தீர்மானித்தது. அந்தப் பேச்சில் அமரர்கள் செல்வநாயகம், டாக்டர் நாகநாதன், வன்னியசிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

தமிழ் மக்களது பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் நோக்குடன் அரசு 1949ஆம் ஆண்டு இலங்கை, இந்தியா, பாகிஸ்தானிய வதிவுடைமைச் சட்டத்தைக் கொண்டுவந்ததென கஜனி மேலும் குறிப்பிட்டுள்ளார். இது இரண்டாவது தவறாகும்.

இந்திய வம்சாவழியினரது பிரஜாவுரிமையைப் பறித்த சட்டம் 20.08.1948இல் அங்கீகரிக்கப்பட்ட 18ஆம் இலக்க இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டமாகும். இந்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு வந்தபோது அமரர் ஜி.ஜி.பொன்னம்பலம், எதிர்க்கட்சியிலேயே இருந்ததுடன், பிரஜாவுரிமையைப் பறித்த அந்தச் சட்டத்திற்கு அவரும் அவரது கட்சியினரும் எதிர்த்தே வாக்களித்தும் இருந்தனர். பின்பு நேருவுடன் கலந்தாலோசித்த பின் பிரஜாவுரிமை இழந்தவர்களுக்குப் பிரஜாவுரிமையை மீளக் கொடுக்கும் சட்டத்தைக் கொண்டுவருவதென டி.எஸ்.சேனநாயக்காவிடம் தமிழ்க் காங்கிரஸ் கட்சி ஒரு வாக்குறுதியைப் பெற்றது. இவ்வாக்குறுதியின் பயனாகவே இழந்த வாக்குரிமையை மீண்டும் கொடுக்கும் இலங்கை, இந்திய, பாகிஸ்தானியப் பிரஜாவுரிமைச் சட்டம் 1949ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது.

எமது தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலம், டி.எஸ்.சேனநாயக்காவுடைய அமைச்சரவையில் அமைச்சராக இருந்தமை பிழையெனக் கருதி கட்டுரையாளர் அவதூறாகக் குறிப்பிட்டுள்ளார்.

பிரஜாவுரிமைச் சட்டங்கள் பற்றிய சர்ச்சையினால்தான் அமரர் செல்வநாயகமும் ஏனையோரும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகி ஒரு புதுக்கட்சியை ஆரம்பித்தனர் என்றால், 1965ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சரவையில் சர்ச்சைக்குரிய இந்தப் பிரஜாவுரிமைச் சட்டத்தை வாபஸ்பெற்ற பின்பா அல்லது இந்திய வம்சாவளியினர் எல்லோருக்கும் பிரஜாவுரிமையைக் கொடுத்த பின்பா அமரர் செல்வநாயகம் சமஷ்டிக் கட்சி சார்பில் திருச்செல்வத்தை அமைச்சராக்கினார். ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்கள் அமைச்சராக இந்தபோது இலங்கையின் வடக்கும் - கிழக்கும் அபிவிருத்தியடைந்தது. ஆனால், அமரர் திருச்செல்வம் ஒன்றையும் சாதிக்கவில்லை. பிரஜாவுரிமையை இழக்கச்செய்த சட்டம் 1948ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நிறைவேறியபோதிலும் அமரர் செல்வநாயகம் தமிழரசுக் கட்சியை ஸ்தாபித்தது 16 மாதங்களிற்குப் பின்பு அதாவது 1949ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்திலேயே ஆகும். ✱

---

## சிறுவர் அரங்கப் போட்டிகள்

வலி.தெற்கு,ஓக.1

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைகள் முடிவடைந்ததும் பரீட்சை எழுதிய மாணவர்களுக்காகச் சிறுவர் அரங்கப் போட்டிகளை நடத்தப்படவுள்ளன. இவற்றில் மாணவர்கள் பங்குபற்றுவதை ஊக்கப்படுத்துமாறு வலிகாமம் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

சிறுவர் அரங்கம் தொடர்பான கோட்ட மட்டப் போட்டிகள் ஒக்ரோபர் மாதம் முதலாம் வாரத்திலும் வலய மட்டப் போட்டிகளை ஒக்ரோபர் மாதம் 15ஆம் திகதியும் நடைபெறத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார். (ஐ-152)

## மாடுகளுக்குத் தொண்டை அடைப்பான் தடுப்பூசி

வலி.தென்மேற்கு,ஓக.1

சண்டிலிப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி பிரிவில் மாடுகளுக்குத் தொண்டை அடைப்பான் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப்படவுள்ளது.

நாளைமறுதினம் புதன்கிழமை பிரான்பற்று முருகமூர்த்தி கோயிலடி, பிரான்பற்று கிராம அபிவிருத்திச் சங்க முன்றிலில் தடுப்பூசி ஏற்றப்படும்.

எதிர்வரும் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை பண்டத்தரிப்பு மைனா மில்லடி, பண்டத்தரிப்பு அம்பாள் ஆலய முன்றில் ஆகிய இடங்களிலும் இந்தத் தடுப்பூசி ஏற்றப்படும்.

கால்நடைகளுக்குரிய இந்தத் தடுப்பு மருந்தினைத் தவறாது ஏற்றிக்கொள்ளுமாறு சண்டிலிப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி ச.சுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

(ஐ-135-204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களின் கண்டிப்பான பழக்கங்களால் படிப்பை இடைநடுவில் குழப்பினார் ஐன்ஸ்ரைன்

**சில** தினங்களிற்கு முன்னர் "உலகை உலுக்கிய ஐந்து கட்டுரைகள்" என்ற தலைப்பில் எனது முதலாவது ஐன்ஸ்ரைன் ஆண்டுச் சிறப்புக் கட்டுரையை வரைந்திருந்தேன். அதில தலைப்பிற்கு அமைவாக மாபெரும் விஞ்ஞானியான அல்பேர்ட் ஐன்ஸ்ரைன் (Albert Einstein) சரியாக நூறு வருடங்களிற்கு முன்னர், அதாவது, 1905 ஆம் ஆண்டு, எழுதிய ஐந்து கட்டுரைகள் பற்றி விவரித்திருந்தேன். சந்தேகமில்லாமல் வாசகர் மத்தியில் ஐன்ஸ்ரைன் பற்றியதொரு விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்கும் என நம்புகின்றேன். அந்த வகையில், ஐன்ஸ்ரைனின் வாழ்க்கையில் நடந்த முக்கிமான சம்பவங்களைத் தொகுத்து இக்கட்டுரையில் எழுதியுள்ளேன்.

ஐன்ஸ்ரைன் 1879 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் திகதி ஜேர்மனியில் (அவரது விலாசம்: 135, Bahnhofstrabe, ulm, Germany) சாதாரண நடுத்தர வர்க்க யூதர் குடும்பமொன்றில் பிறந்தார். 1880 ஆம் ஆண்டு ஐன்ஸ்ரைனின் குடும்பத்தினர் மியூனிச (Munich) எனுமிடத்திற்கு இடம்பெயர்ந்து சென்றார்கள். அங்கு ஐன்ஸ்ரைனின் அப்பா மின் உபகரணங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை நிறுவினார். இதில் வியப்பு என்னவென்றால், இற்றைக்கு சுமார் 125 ஆண்டுகளிற்கு முன்பே ஜேர்மனியில் மின்சார வசதி "இருந்திருக்கிறது. ஆனால், இன்றும்கூட எமது நாட்டில் எத்தனையோ இடங்கள் மின்சார வசதியின்றியும், அத்துடன் வழங்கப்பட்ட மின்சார வசதியும் சீரற்று இருக்கின்றன.

ஐன்ஸ்ரைனின் பெற்றோர்கள் அவரை 1888 ஆம் ஆண்டு மியூனிச்சிலுள்ள லூட்போல்ட் ஜிம்னாசியம் (Luitpold Gyn anasium) எனும் பாடசாலையில் சேர்த்து விடுகிறார்கள். அவர் அந்நாளில் கேத்திர



1911 ஆம் ஆண்டு சோல்வே மாநாட்டில் எடுக்கப்பட்ட படம்.

கணிதத்தை விரும்பிக் கற்றதாக அவரின் ஆசிரியர்கள் கூறியிருந்தார்கள். ஐன்ஸ்ரைனுக்கு 15 வயது ஆகியபோது, அதாவது 1894 ஆம் ஆண்டு, அவரை மியூனிச்சிலேயே விட்டுவிட்டு அவரது குடும்பம் இத்தாலிக்கு (Italy) இடம்பெயந்தது. குடும்பத்தைப் பிரிந்து தனித்திருந்த கவலையாலும், அவரிற்கு படிப்பித்த ஆசிரியர்களின் கண்டிப்பான பழக்கங்களாலும் இவர் தனது பாடசாலைப் படிப்பைக் குழப்பினார். சிறிது காலம் படிப்பைக் கைவிட்டு சுற்றித்திரிந்துவிட்டு 1895 ஆம் ஆண்டு இத்தாலியிலிருந்த தனது குடும்பத்துடன் இணைகின்றார். பின்னர் சுவிற்ஸர்லாந்திலுள்ள சூரிச் (Zurich) எனுமிடத்தில் மேற்கொண்டு படிப்பதற்கான உட்புகு தேர்வில் தேறமுடியாமல், சுவிற்ஸர்லாந்திலேயுள்ள ஆரவ் (Aarau) எனும் இடத்திலிருந்த இராணுவப் பாடசாலை ஒன்றில் சேர்ந்தார். அடுத்த ஆண்டு (1896) ஆரவ்விலுள்ள பாடசாலையில் டிப்ளோமா பரீட்சையில் சித்தியடைவதன் மூலம் சூரிச் பல்கலைக்கழகத்தில் (University of Zurich) அனுமதி பெறுகிறார். இந்த வருடமே ஐன்ஸ்ரைன் தனது ஜேர்மன் பிரஜாவுரிமையையும் கைவிடுகிறார். ஐன்ஸ்ரைன் தனது 21 ஆவது வயதில் (1900 ஆம் ஆண்டு) சூரிச் பல்கலைக்கழகத்திலிருந்து பட்டம் பெற்று வெளியேறினார். இவருக்கு அறிமுறைக்குரிய பௌதிகத்திலும் (Theoietical physics), பரிசோதனைக்குரிய பௌதிகத்திலும் (Experimental physics), வானியலிலும் (Astronomy) மொத்தம் 6 புள்ளிகளிலிருந்து 5 புள்ளிகளும் (80%) சார்புகளின் கொள்கைக்கு (Theory of functions) 5.5 புள்ளிகளும் (90%) கிடைத்தன. பட்டப் படிப்பு முடித்தபின் சிறிதுகாலம் அங்கும் இங்கும் சிறுசிறு வேலைகள் செய்தார். அவருக்கு சுவிற்ஸர்லாந்து பிரஜாவுரிமை 1901 ஆழ் ஆண்டு கிடைத்ததால் இராணுவத்தில் சேர முயற்சிக்கிறார். ஆனால், இவரின் கால்கள் தட்டையாக இருந்ததினாலும், பருத்த சிரைகளுள்ள (Varicous) நரம்புகள் இருந்ததாலும் இராணுவத்தில் சேரத் தகுதியற்றவர் எனப் பிரகடனப்படுத்தி இவரின் விண்ணப்பத்தை நிராகரித்தனர். இதனால், அங்கிருந்த சில பாடசாலைகளில் தற்காலிகத் தொண்டர் ஆசிரியராகக் கடமையாற்றினார்.

இறுதியில் இவருக்கு 1902 ஆம் ஆண்டு பேர்ண் (Bern) எனுமிடத்திலிருந்த உரிமைப்பத்திரம் வழங்கும் அலுவலகத்தில் (Patent office) 3 ஆவது தர தொழில்நுட்ப நிபுணராக வேலை கிடைத்தது. இவருக்கு அப்போது வழங்கப்பட்ட சம்பளம் 3500 சுவிஷ பிராங்குகள் (Sw.Fr.) ஆகும். இதே ஆண்டு இவருடன் சூரிச் பல்கலைக்கழத்தில் இணைந்து கல்வி கற்ற இவரின் காதலியான மிலீவா மேரி (Mileva Marie) என்பவர் லிசேள் (Lieserl) என்ற மகளைப் பெற்றெடுக்கின்றார். அதன் பின்னரே 1903 ஆம் ஆண்டு, ஐன்ஸ்ரைன் - மிலீவா திருமணம் நடைபெறுகிறது. 1904 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதி இவர்களுக்கு முதலாவது மகன் ஹன்ஸ் (Hans) அல்பேர்ட் பிறந்தார்.

1905 ஆம் ஆண்டு ஐன்ஸ்டைனுக்கு முக்

**2005 ஆம் ஆண்டு உலக பௌதிகவியல் ஆண்டு என்றும் ஐன்ஸ்ரைன் ஆண்டு என்றும் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையும், தூய - பிரயோக - பௌதிகவியல் கூட்டுறவு அமைப்பும் இணைந்து இந்தப் பிரகடனத்தைச் செய்திருக்கின்றன.**

**'அகிலத்தின் ஆசான்' என வர்ணிக்கப்படும் விஞ்ஞானி ஐன்ஸ்ரைனின் 50 ஆவது சிரார்த்த தினத்தை முன்னிட்டே இந்தப் பிரகடனம். அதனையொட்டி இந்த சிறப்புக் கட்டுரையைத் தருகிறார் யாழ். பல்கலைக்கழக பௌதிகவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நாகலிங்கம் சிவயோகன்.**

கியமானதொரு ஆண்டாக அமைந்தது. இக்காலத்தில் தான் இவர் தனது Ph.D கட்டுரையை (Thesis) சூரிச் பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பித்ததோடு, சிறப்புத் தொடர்பியலில் (Special Relativity) இரண்டு கட்டுரைகளையும், சக்திச் சொட்டுக் கொள்கையில (Quantum Theroy) ஒரு கட்டுரையையும், பிரௌண் (Brown) இயக்கத்தில் ஒரு கட்டுரையையும், "அன்னலென் டேர் பிசிக்" (Annalen der physik) என்ற விஞ்ஞானச் சஞ்சிகையில் பிரசுரித்தார். இக்கட்டுரைகள் அவரின் திறமையை வெளிப்படுத்தியதோடு மாத்திரமல்லாமல், அவரை உலகப்புகழ் பெற்ற மேதையாக்கின. இவ்வாண்டின் மகிமையினால்தான் இவ்வாண்டை உலக பௌதிகவியல் ஆண்டு, சர்வதேச பௌதிகவியல் ஆண்டு, ஐன்ஸ்ரைனின் ஆண்டு எனப் பலவிதமாகப் பிரகடனப்படுத்தியுள்ளனர். இவ்வாண்டில் வெளிவந்த கட்டுரைகள் பற்றித்தான் எனது 'ஐன்ஸ்டைன் ஆண்டுச் சிறப்புக் கட்டுரை - 1' அமைந்திருந்தது.

இவ்வளவு புகழ்பெற்றும் இவருக்கு உடனடியாக நல்ல பொருத்தமான வேலை எதுவும் கிடைக்கவில்லை. இவர் ஏற்கனவே வேலை செய்து கொண்டிருந்த உரிமைப்பத்திரம் வழங்கும் அலுவலகத்திலேயே தொடர்ந்தும் வேலை செய்தார். ஆயினும், இவருக்கு தொழில்நுட்ப நிபுணர் தரம் 2 இற்கு பதவி உயர்வு கொடுத்ததுடன், இவரின் சம்பளத்தையும் (Sw.Fr.) 4,500 சுவிஷ் பிராங்குகளாக உயர்த்தினார்கள். தொடர்ந்து இரண்டரை வருடங்கள் அங்கேயே வேலை செய்தார். 1909 ஆம் ஆண்டு அந்த வேலையை இராஜினாமாச் செய்துவிட்டு சூரிச் பல்கலைக்கழகத்தில் ஒக்ரோபர் 15 ஆம் திகதி முதல் உதவிப் பேராசிரியராக

**நாகலிங்கம் சிவயோகன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
பௌதிகவியல் துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

இணைந்தார். அடுத்த வருடம் (1910) ஜூலை 28 ஆம் திகதி இவரிற்கு இரண்டாவது மகன் எடுஆர்ட் (Eduard) பிறந்தார். 1911 ஆம் ஆண்டு இவர் ஜேர்மனியிலுள்ள பராக் பல்கலைக் கழகத்தில் (University of Prague) பேராசிரியராக நியமனம் பெற்றார். அங்கு வேலை செய்தபோதுதான் ஒளிக்கதிர்கள் புவியீர்ப்பால் வளைக்கப்படலாம் என்றும், அப்படி வளைவதை [illegible] அவதானிக்க முடியும் என்றும் கண்டுபிடித்தார். அத்துடன், அவ்வாண்டு புருசல்ஸில் (Brussels) நடைபெற்ற சோல்வே மாநாட்டில் (Solvey Congress) கலந்துகொள்ளும் வாய்ப்பும் இவருக்குக் கிட்டியது. அங்கு தான் அப்போது பிரபலமாகவிருந்த பௌதிக வல்லுநர்களை முதன்முதலாகச் சந்திக்கும் வாய்ப்பும் இவருக்குக் கிட்டியது.

இச்சந்திப்பும் மிக முக்கியமானதொரு சந்திப்பாக சரித்திரத்தில் இடம்பெற்றது. அந்த மாநாட்டில் எடுக்கப்பட்ட படத்தையே படத்தில் காண்கிறீர்கள். இதில் நிற்பவர்களில் வலது புறமிருந்து இரண்டாவது இடத்தில் ஐன்ஸ்ரைனைக் காணலாம். இவர் 1912 ஆம் ஆண்டு ஜேர்மனியை விட்டு மீண்டும் சுவிற்ஸர்லாந்து சென்று அங்கு சூரிச் பல்கலைக் கழகத்திலேயே பேராசிரியராக இணைந்தார்.

1914 ஆம் ஆண்டு இவரின் வாழ்வில் முக்கியமானதொரு மாற்றம் நிகழ்ந்தது. இவர் பேர்லின் பல்கலைக்கழத்திற்கு (University of Berlin) பேராசிரியராக நியமனம் பெற்றுச் செல்கின்றார். இங்கு ஐன்ஸ்ரைன் தனது மனைவியைப் பிரிந்து தனிக்குடித்தனம் நடத்தினார். இவரின் மனைவி மிலீவா தனது பிள்ளைகளுடன் சூரிச் சென்று அங்கு குடியேறினார். 1915 ஆம் ஆண்டு ஐன்ஸ்ரைன் தனது பொதுவான தொடர்பியல் (General Relativity) கொள்கையை உருவாக்கி முடித்தார். இந்நேரம் போருக்கு எதிரான விஞ்ஞானம் ஒன்றில் கையொப்பமிட்டு, மக்களை ஐரோப்பிய ஒன்றியத்துடன் (Leaque of Europeans) இணையுமாறும் வேண்டுகோள் விடுக்கிறார். 1916 ஆம் ஆண்டு இவர் கிட்டத்தட்ட 10 ஆய்வுக்கட்டுரைகளைப் பிரசுரித்தார். அவற்றுள் புவியீர்ப்பு அலைகள் (Gravitational waves) பற்றிய ஆய்வுக் கட்டுரையும், ஒளியின் சுய (Spontaneous), ஊக்கிய (Stimulated) காலல் (Emission) லேசர் உருவாக்கம் போன்ற கட்டுரைகள் மிகவும் பிரசித்திபெற்றன. அத்துடன் பொதுவான தொடர்பியல் கொள்கையின் மூலங்கள் (The origin of the Generl Theory of Relativity) என்ற புத்தகத்தையும் எழுதிவெளியிட்டார். அத்துடன் மக்ஸ பிளாங்கைத் (MAX PLANCK) ஜேர்மன் பௌதிக சங்கத்தின் (German Physical Society) தலைவரானார்.

1917 ஆம் ஆண்டு பேர்லினிலிருந்த கேய்சர்வில்ஹெம் நிறுவனத்தின் (Kaiser - Wilhelm Institute) தலைவரானார். இவ்வாண்டிலேயே இவர் இருமை முரணோடி (Twin Paradox), அண்டவியல் மாறிலி (Cosmological Constant) என்பவை பற்றி ஆய்வுக் கட்டுரைகள் எழுதிப் பிரசுரித்தார். இவ்வருடம் இவர் ஓய்வின்றி அல்லும் பகலும் ஆய்வு வேலைகள் செய்ததால் வயிற்றுப்புண் (Ulcer), ஈரல் பிரச்சினை, மஞ்சள்காமாலை (Joun



ஐன்ஸ்ரைனும் அவரது முதலாவது மனைவி மிலவாவும்

dice) போன்ற நோய்களால் பீடிக்கப்பட்டு அவதியுற்றார். இதனால், இவர் பல மாதங்கள படுக்கையிலேயே இருக்க வேண்டியிருந்தது. இவர் மனைவியைப் பிரிந்து தனியாக இருந்ததால் இவரின் மச்சாள் முறையான எல்ஷா (Elsa) என்பவர் இவரைக்கூட இருந்து கவனித்தார்.

எல்ஷாவின் அன்பும், கவனிப்பும் காதலாக மாற, 1919 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 2 ஆம திகதி எல்ஷாவைத் திருமணம் செய்தார். அதற்காக அவரின் முதல் மனைவியான மிலீவாவிடம் இருந்தும் விவாகரத்துப் பெற்றார். விவாகரத்திற்கு ஈடாக ஐன்ஸ்ரைனுக்கு ஏதாவது நோபல் பரிசு கிடைத்தால் அப் பரிசுப் பணம் முழுவதும் மிலீவாவிற்கு வழங்கப்பட வேண்டும் என்று ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது.

இதே ஆண்டில் இவரால் 1911 ஆண்டு எதிர்வுகூறப்பட்ட ஒளியின் வளைவு பற்றிய கொள்கையும், 1919 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி ஏற்பட்ட பூரண சூரியகிரகணத்தின் போது ஆதர் எடிங்ரன் (Arthur Eddington) என்பவரால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் அடிப்படையில் நிரூபிக்கப்பட்டது. ஐன்ஸ்ரைனின் கொள்கைப்படி பாரிய உடல்களிற்கு அருகில் புவியீர்ப்பினால் வெளி - நேரம் (Space - time) வளைவடைய வேண்டும். அப்படியாயின் நட்சத்திரங்களின் நிலையை சூரியனின் விளிம்புக்கு அருகில் பார்க்கும்போது ஒரு நூக்கு (Shift) தெரியவேண்டும். அப்படியான நூக்கை பகலில் நட்சத்திரங்களைப் பார்க்கக்கூடிய நாளான சூரிய கிரகணம் ஏற்படும் நாளில் தான் அவதானிக்கமுடியும். அதாவது ஒரு நட்சத்திரத்தின் தானத்தை முதலில் நேரடியாக அளக்கவேண்டும். பின்னர் சூரியகிரகணத்தின்போது நட்சத்திரத்தின் தானத்தை சூரியனின் விளிம்புடன் அளக்கவேண்டும்.



ஐன்ஸ்ரைனும் அவரது இரணடாவது மனைவி எல்ஷாவும்.

இதிலிருந்து நட்சத்திரத்திலிருந்து வரும் ஒளியானது சூரியனுக்குக் கிட்டவரும்போது சூரியனின் புவியீர்ப்பால் வளைவடைகிறதா எனக் கணிக்கமுடியும். ஐன்ஸ்ரைன் தனது கொள்கையிலிருந்து கணித்துப் பெற்ற நூக்கின் அளவும், எடிங்ரனால் பரிசோதனை மூலம் பெறப்பட்ட நூக்கின் அளவும் கிட்டத்தட்ட சமனாக இருந்தன.

எடிங்ரன் தனது கண்டுபிடிப்பை அரச சபையும் (Royal Society), அரச வானியல் சபையும் (Royal Astronomical society) இணைந்து 1919 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6 ஆம் திகதி நடத்திய ஒன்று கூடலொன்றில் சமர்ப்பித்தார். அந்த ஒன்றுகூடலில் எடிங்ரன் தனது கண்டுபிடிப்பு இரு மாபெரும் விஞ்ஞானிகளான நியூட்டனுக்கும் ஐன்ஸ்ரைனுக்குமிடையிலான முக்கிய சோதனை எனக் குறிப்பிட்டு, ஐன்ஸ்ரைனின் எதிர்வுகூறல் நிருபிக்கப்பட்டதாக அறிவித்தார். இக் கண்டுபிடிப்பு பற்றிய செய்தி உலகெங்கும் பத்திரிகைகளில் தலைப்புச் செய்தியாக வெளிவந்தது. அத்துடன், ஒரு ஜேர்மன் விஞ்ஞானி

**ஐன்ஸ்ரைன் ஆண்டு சிறப்புக்கட்டுரை 2**

யின் எதிர்வுகூறல் ஒரு பிரித்தானிய விஞ்ஞானியால் பரிசோதனை மூலம் நிருபிக்கப்பட்டதால், அக்கண்டுபிடிப்பு ஓர் இரவுக்குள்ளேயே மிகவும் பிரபலமடைந்தது. ஐன்ஸ்ரைனை ஒரு ஞானி (Sage) ஆக அனைவரும எண்ணினார்கள். அதைவிட மேலாக அந்நேரம் வெளிவந்த நியூயோர்க் ரைம்ஸ் (New york Times) என்னும் பத்திரிகை ஐன்ஸ்ரைனின் தொடர்பியல் கொள்கையை உலகிலேயே 12 புத்திசாலிகளால் மாத்திரம் விளங்கக்கூடியதாக இருந்தது என்று விவரித்திருந்தது.

1920 ஆம் ஆண்டு இவரின் தொடர்பியல் கொள்கைக்கு மதகுருமாரிடமிருந்து எதிர்ப்புக் கிளம்பியது. இதனால் ஐன்ஸ்ரைன் ஜேர்மனியை விட்டு போகலாமா எனச் சிந்தித்தார். 1921 ஆம் ஆண்டு இவர் முதன் முதலாக அமெரிக்கா சென்றார். ஐன்ஸ்ரைனின் வாழ்வில் 1922 ஆண்டும் முக்கியமானதொரு ஆண்டாகும். ஏனெனில், இந்த ஆண்டிலேயே ஐன்ஸ்ரைனுக்கு 1921 ஆம் ஆண்டிற்கான நோபல் பரிசு அவர் கண்டுபிடித்த ஒளி மின்விளைவிற்காக வழங்கப்பட்டது. அதாவது, ஐன்ஸ்ரைனால் 1905 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட ஒளி மின்விளைவிற்கு சர்வதேச அங்கீகாரம் கிடைக்க கிட்டத்தட்ட 16 வருடங்கள் சென்றிருக்கின்றன. இவர் 1919 ஆம் ஆண்டு தனது முதல் மனைவி மிலீவாவிடமிருந்து விவாகரத்துப் பெற்றபோது செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி தனக்கு நோபல் பரிசுப் பணமாகக் கிடைத்த us$ 32,000 (அமெரிக்க டொலர்கள்) முழுவதினையும் மிலீவாவிற்கே கொடுத்தார். மேலும் இவ்வாண்டிலேயே அவர் ஒன்றுபடுத்திய புலக்கொள்கை (Unified Field Theory) பற்றிய தனது முதலாவது கட்டுரையையும் எழுதினார்.

*(வளரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியப் படைப்புகள் மூலம் மகத்தான சமூகப் பணியாற்றியவர்கள்



## மறைந்த எழுத்தாளர்களுக்கு ஒன்றியம் அஞ்சலி

நல்லூர்,ஓக.1

இன்றைய இளம் படைப்பாளிகள், மூத்த படைப்பாளிகள் கலை இலக்கியவாதிகளை நினைவில் வைத்திருத்தல் வேண்டும். தமது இலக்கியப் படைப்புக்களினூடாக அவர்கள் சமூகத்திற்கு ஆற்றிய பணிகள் மகத்தானவை.

அண்மையில் மறைந்த இலக்கியவாதிகளுக்கான அஞ்சலிக் கூட்டத்தில் பேசிய பிரபல எழுத்தாளர் கலாநிதி.க.குணராசா (செங்கை ஆழியான்) இவ்வாறு கூறினார்.

அண்மையில் மறைந்த இலக்கியவாதிகளுக்கான அஞ்சலிக்கூட்டம் தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் சார்பில் தாயகம் இதழ் ஆசிரியர் க.தணிகாசலம் தலைமையில் ஆரியகுளம் பகுதியில் உள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றியப் பணிமனையில் நடைபெற்றது.

மறைந்த கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை செம்பியன் செல்வன், வண்ணை செ.சிவராஜா, புலோலியூர் சதாசிவம் ஆகியோருக்கான நினைவஞ்சலியை நிகழ்த்திய கலாநிதி குணராசா மேலும் தெரிவித்ததாவது:-

நாடகக் கலைக்காகத் தன்னை அர்ப்பணித்த கலைப் பேரரசு சன்மார்க்க சபையை அமைத்துப் பணிசெய்தவர். நாடகக் கலைஞராக மட்டுமன்றி பிரதியாக்கம் செய்பவராகவும் அதற்கும் அப்பால் பல கலைகளையும் ரசித்த அற்புதக் கலைஞராகத் திகழ்ந்தவர். ஏனையவர்களின் கருத்துக்கு மதிப்பளித்தவர்.

செம்பியன் செல்வன் ஒரு சிறந்த படைப்பாளியாக இருந்தபோதும் மென்மேலும் கற்பதிலும் நவீன நாடகக்கலைகளை நன்கு அறிந்தவராகவும் ஆர்வமுடன் விளங்கினார். முரண்பாடான கருத்துக்கள் இருந்தாலும் கூட பிறரது கருத்துக்கும் செவிமடுத்துக் கொள்ளும் பெருந்தன்மையானவர். நாங்கள் பெரிதாகக் கற்பதில்லை. அவரோ கற்பதில் ஆர்வம்கொண்டவர். தாளக்காவடி என்ற கிராமிய கலைவடிவத்தை அலசி ஆராய்ந்தவர். பல்பரிமாணம் கொண்ட சிறுகதைகளைப் படைத்த அவரின் சர்ப்பவியூகம் சாகித்தியப் பரிசு பெற்றது.

50இற்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதிய வண்ணை சிவராஜா முஸ்லிம்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து விலகிய வரலாற்றை எழுதியவர். துணிச்சல் மிக்க அவர் ஆசிரியராக இருந்துகொண்டு ஆசிரியர்களுக்கு




எதிராகவும் கருத்துக்களைக் கூறியுள்ளார். ஊர்பெயரைக் கொண்ட பல எழுத்தாளர்கள் இருக்கிறார்கள் மறுமலர்ச்சியின் ஆரம்பகர்த்தாவான புலோலியூர் சதாசிவம் நான்கு சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார்.

இவர்களது மறைவு எழுத்தாளர்களுக்கு பாரிய இழப்பாகும்- என்றார்.

கலாநிதி செ.திருநாவுக்கரசு பேசும்போது கூறியதாவது:-

சொக்கன் ஐயா தனது 14 ஆவது வயதில் தொடங்கி இறக்கும்வரை பல நூல்களை தமிழ் சமூகத்திற்கு விட்டுச்சென்றுள்ளார். நந்தி ஐயா ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் தன்னை இணைத்துக்கொண்டவர். 60இற்கும் மேற்பட்ட கதைகளை எழுதியுள்ளார். அவற்றில் சில கிடைக்கவில்லை. சில முடிவு பெறாத அவரது படைப்புக்களை செங்கை ஆழியான் அவர்கள் எழுதிமுடிக்கவேண்டும். சொக்கன் தான் இறப்பதற்கு இரு நாள்களுக்கு முன்னர் கூட தமிழ்வகுப்பொன்றை நடத்தியுள்ளார். குடும்பங்களிலும் பார்க்க தமிழையும் தமிழ் சமூகத் தையும்நேசித்த பெரியார்கள் இவர்கள். இங்கே உள்ள நிலைமைகளை தனது கதைகளின் மூலம் நேரடியாக எழுதிக் கூறியவர் நந்தி. இருவரின் நினைவுகளும் தமிழர்களிடம் இருக்கும் என் றார்.

சொ.சிவபாலன் பேசும்போது:-

இலக்கியத்தில் சமூகநோக்கு என்ன என்பது கேள்வி? சமூகம் பற்றிச் சிந்தித்து வழிநடத்தவேண்டியது இலக்கிய கர்த்தாக்களின் பொறுப்பு. தமிழ் அடையாளம் அழியும் போது அந்த அவலச் சூழல்களை வெளிக்கொணரக் கூடியதாக எழுத்தாளர்கள் தமது கருத்துக்களை மக்களிடம் தரவேண்டும். மறைந்த எழுத்தாளர் கே.வி.நடராஜன் அந்த வகையில் தனது பணியை சமூகத்திற்கு வழங்கியுள்ளார் என்றார்.

க.தணிகாசலம் பேசும்போது:

மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஈழத்தின் மூத்த எழுத்தாளர் கணேஸ் இந்திய சுதந்திரப் போராட்டம் பொதுவுடமைக் காலத்தில் வந்தவர். முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை உருவாக்கியவர். வடமராட்சியைச் சேர்ந்த ராஜகாந்தன் சிறுகதை, கவிதை, கட்டுரை எழுதும் ஆற்றல்கள் நிறைந்தவர். இவரது கருத்துக்கள் இடதுசாரிக் கொள்கைகளுடன் உடன்பட்டது. கணேசைப் போல் இவரும் முற்போக்குக் கொள்கையாளராக விளங்கினார். ராஜகாந்தன், நாங்கள் பல்வேறு விடயங்களை அறியவேண்டும் என்பதால் பலவற்றை மொழிபெயர்த்து எமக்குத் தந்தவர். ஆழமான சிந்தனைகளைக் கொண்ட இவர்களின் இழப்பு எழுத்துலகிற்குப் பாரிய நட்டம் என்றார்.

தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் செயலாளர் உடுவில் அரவிந்தனும் உரையாற்றினார். (ப-111)

## நற்சேவையாளர்களை அவர்கள் வாழும்போதே கௌரவிக்கவேண்டும்

சுழிபுரம்,ஓக.1

நல்ல சேவையாளர்கள் வாழும் போதே அவர்களை கௌரவிக்கும் பண்பு எங்களிடம் மேலோங்க வேண்டும். அப்போதுதான் மேலும்மேலும் பலர் சேவை செய்ய முன்வருவார்கள் என்று ஓய்வுபெற்ற வடமாநில சங்கீத கல்விப்பணிப்பாளர் சங்கீதபூஷணம் சு.கணபதிப்பிள்ளை கூறினார்.

பொதுப்பணிகள் புரிந்துவரும் ஓய்வூதியர் க.தெட்சணாமூர்த்யைக் கௌரவித்து தொல்புரம் - மூளாய் ஐக்கிய பரஸ்பரச் சங்கத்தினர் நடத்திய உபகார விழாவில் கணபதிப்பிள்ளை உரையாற்றினார்.

தொல்புரம் மேற்கில் வாழ்ந்துவரும் ஓய்வூதியர் க.தெட்சணாமூர்த்தி கிராமத்திலுள்ள நிதி சம்பந்தமான நிறுவனங்களை களங்கம் இல்லாது வழிநடத்துவதில் வல்லவராக விளங்கி வந்துள்ளார். இவர் போல் பலர் உருவாகவேண்டும் என்பது எனது விருப்பமாகும் என்று அவர் மேலும் பேசுகையில் கூறினார்.

விழா சங்கத் தலைவர் தி.உதயசூரியன் ஜே.பி.தலைமையில் நடைபெற்றது. வே.செல்வநாயகம் ஆசிரியர் மு.நமசிவாயகம் ஆசிரியர் க.கனகசபை உட்பட பலர் பாராட் டுரை வழங்கினர். க.தெட்சணாமூர்த்தி உரையாற்றுகையில், நாம் தற்துணிவுடன் நல்ல கருமங்களைச் செய்ய முன்வரவேண்டும். அவை ஒரு காலமும் வீண் போகாது நாம் கைசுத்தம் சொல்சுத்தம் உடையவர்களாக விளங்க வேண்டும். என்று குறிப்பிட்டார். (ப-28-204)

## மூதாதையர் வளர்த்துவிட்ட மரங்களை தறித்து ஆரோக்கியத்தைக் கெடுக்காதீர்

### வலி.மேற்கு செயலர் கோரிக்கை



மரங்களை வளர்ப்பதினால் நல்ல காற்று கிடைகின்றது. சுற்றுச் சூழல் பாதுகாக்கப்படுகின்றது. மக்களின் தேக ஆரோக்கியம் வலுவடைகின்றது. மரங்களை நட்டுவிடுவதோடு நின்றுவிடாமல், அதனைப் பேணிப் பராமரிக்கவும் வேண்டும். எமது மூதாதையர், தாய், தந்தையர் மரங்களை நட்டார்கள், சுற்றுச்சூழலைப் பாதுகாத்தார்கள், நல்ல தேக ஆரோக்கியத்துடன் வாழ்ந்தார்கள். ஆனால், இன்றைய தலைமுறையினர் அவர்களால் நட்டு, பராமரிக்கப்பட்டு வந்த மரங்களைத் தறித்து தமது சுயதேவைகளைப் பூர்த்திசெய்வதனால் தேக ஆரோக்கியமின்றி வாழவேண்டிய நிலைக்குள்ளாகியுள்ளனர் என வலி.மேற்குப் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் தெரிவித்தார்.

வலி.மேற்கு பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் வழங்கப்பட்ட மரக்கன்றுகள், செயலகத்தில் வைத்துப் பொதுமக்களுக்கு விநியோகிக்கும்போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தனதுரையில் கூறியதாவது:-

மக்களின் ஒத்துழைப்பு சூழல்பாதுகாப்பிற்கு மிகவும் அவசியமானதாகும். இவர்களின் ஒத்துழைப்பு இன்றேல் சூழலைப் பாதுகாப்பது சிரமத்திற்குரியதாகும். போர்க்கால சூழ்நிலைகள், இயற்கை அனர்த்தங்கள் போன்றவற்றிலும் பார்க்க, மரங்கள் அநாவசியமான முறையிலே தறிக்கப்பட்டு வருவதால், சூழல் மாசடைகின்றது. நல்ல காற்றைப் பெற முடியவில்லை. மக்களின் தேக ஆரோக்கியம் குன்கிறது- என்று கூறினார்.

இந்நிகழ்வில் வலி.மேற்கு பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் உட்பட, செயலக ஊழியர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டனர், தேக்கு, மருதம் சவுண்டி, போன்ற மரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டன.(ப-29)

## தமிழருக்கு எதையும் கொடுக்க பேரினவாதம் அனுமதிக்காது



இன்று பௌத்த பேரினவாதம் தென்னிலங்கையில் தனது முழு எதிர்ப்பையும் தமிழ் மக்களுக்கு எதிராகக் காட்டுகின்றது. அதாவது, தமிழ்மக்களுக்கு எதனையும் கொடுக்க அனுமதிக்க மாட்டோம் என்பதை மீண் டும் வெளிக்காட்டி நிற்கின்றார் கள்.

மேற்கண்டவாறு யாழ்.மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் குறிப்பிட்டார்.

தென்னிலங்கையில் பௌத்த பேரினவாதம் தமிழ் மக்களுக்கு எதிராகக் காட்டிவரும் எதிர்ப்பைக் கண்டித்து யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணி அண்மையில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

எமது கோரிக்கைகளுக்குச் சிங்கள பௌத்த பேரினவாதிகள் எதனையும் விட்டுக்கொடுப்பதாக இல்லை. ஆனால், இந்தப் போராட்டத்திலே நாம் இராணுவப் பலத்துடன் அரசியல் பலத்தையும் இணைத்து இன்று ஓர் அணியில் திரண்டு நிற்கின்றோம்.

இன்று எமது இனம், தேசியத் தலைவர் பிரபாகரனின் வழிகாட்டலின் கீழ் எமது விடுதலையை நோக்கி ஒவ்வோர் அடியாக முன்னேறிக்கொண்டு இருக்கின்றது. இந்த நிலைமையில் இன்று எம்மிடையே இருக்கும் சில புல்லுருவிகள் விடுதலைப் போராட்டத்தை கொச்சைப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டு இருப்பதைத் தமிழ்த் தேசியம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

நாங்கள் பயங்கரவாதிகள் அல்ல. விரும்பி ஆயுதங்களை ஏந்தவில்லை. அவை எங்கள் மீது வலிந்து திணிக்கப்பட்டது.

எம்முடைய இனம் அழிக்கப்பட்டபோதுதான் இளைஞர்கள் இனத்தைப் பாதுகாப்பதற்காக, மொழியைப் பாதுகாப்பதற்காக ஆயுதம் ஏந்திப் போராடினார்கள்.

தமது இன்னுயிர்களை ஈந்து இம்மண்ணிலே போராட்டத்தை நடத்தினார்கள். தனித்துவமாக தலைநிமிர்ந்து நிற்கிறார்கள். தமிழ் இனம் இன்று ஒன்றுபட்டுத் தமது உரிமைகளை மீட்டெடுப்பதற்கு துணிந்து விட்டது.

நாங்கள் இனியும் யாரிடமும் கையேந்தி உரிமை பெறும் இனமாக வாழவேண்டும் என்ற அவசியமில்லை. இதை உணர்ந்துதான் இன்று நாடாளுமன்றத்திற்குள்ளும், வெளியேயும் தமிழ்த் தேசியத்திற்கான போராட்டத்தை தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் முன்னெடுத்துக்கொண்டு இருக்கின்றோம்.

எதிர்வரும் காலங்களிலும் இத்தகைய மக்கள் எழுச்சிப் போராட்டங்களை நடத்தி ஜனநாயக பலத்தை - தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவப் பலத்திற்கு பலம் சேர்க்கின்ற அணியாக செயற்படவுள்ளோம். அடிவருடிகளும் கைக்கூலிகளும் இன்னும் கோடாரிக் காம்புகளாக இருந்து எம்மைக் காட்டிக்கொள்வதை நிறுத்திக் கொள்ளவேண்டும் - என்று கூறினார். (ப-[illegible]-204)

## கல்யாண மண்டபங்கள் கலாசாரத்தை வளர்ப்பவையாகவும் இருக்கவேண்டும்

வலி.கிழக்கு,ஓக.1

கல்யாண மண்டபங்கள் வெறும் கல்யாண விழாக்களை நடத்துபவையாக மட்டுமன்றி எமது கலை, கலாசாரம், பண்பாடுபோன்ற பாரம்பரியங்களை வளர்ப்பவையாகவும் அமையவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஷ்பிரேமச்சந்திரன்.

அண்மையில் கட்டப்பிராய் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்தில் புதிதாகக் கட்டப்பட்ட கல்யாண மண்டபத் திறப்புவிழா நடைபெற்றது.

ஆலய பரிபலானசபையின் தலைவர் எஸ்.தவராசா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

இன்று எமது மண்ணிலே கலை, கலாசாரம் கேள்விக்குறியாக உள்ளது. இவற்றை நல்லமுறையில் வளர்த்து இளம் சந்ததியினரை பாதுகாப்பது அனைவரதும் கடமையும் ஆகும்.

இன்று கிராமங்கள், நகரங்களில் வசிப்போர் மூத்த தலைமுறையினர்களில் வழிமுறைகளை பின்பற்றி வாழாது மனம் போன போக்கில் வாழும்நிலையே இன்று உள்ளது.

தொழில் நுட்ப வசதிகளால் உலகம் சுருங்கியுள்ள இந்த நிலையிலே இந்தக் கிராமப் பகுதி சிறுவர்கள் இளைஞர்கள், யுவதிகள் போன்றோர்களுக்கு எமது கலை, பண்பாடு, சமய ஒழுக்கநெறிகளை நல் வழிப்படுத்துகின்ற ஒரு மண்டபமாக இந்த மண்டபம் திகழ வேண் டும்- என்றார்.



இந்து கலாசார அமைச்சின் செயலாளர்சிவமகாலிங்கம் தனதுரையில்:-

எமது சைவசமயம் பாரம்பரிய பழைமை வாய்ந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். எனவே, எமது சமயம் வளர தேவையற்ற வதந்திகளை தடுக்க ஆலயங்கள் வகிக்கும் பங்கு முக்கியமானது.

எமது மக்கள் கடந்த கால போரினால் ஏதோ ஒருவகையில் ஒவ்வொருவரும் பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

அந்த வகையில் யோகாசனம், தியானம், அறநெறிப்பாடசாலை போன்ற நற்சிந்தனைகளை ஊட்டும் செயற்பாடுகளை இந்தப் புதிய மண்டபத்தில் நடத்தப்படவேண்டும்.

மண்டபம் எப்போதும் திறந்து இருக்க வேண்டும்- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்


## விற்பனைக்கு

நல்லின பூச்சி நீக்கப்பட்ட பிசோன் (Dash Houhd) நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 35/1. இந்துக்கல்லூரி லேன், யாழ்ப்பாணம். (38380)

நல்ல நிலையிலுள்ள வெல்டிங் மெசின், 18KW டைனமோ, ட்ரான்ஸ்போமர், England Dinamo 5KW மற்றும் ஏனைய உதிரிப்பாகங்களும் எம்மிடம் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: முத்துச்சாமி, C/o ந.லோகநாதன் (வெள்ளையண்ணை) அல்லாரை வடக்கு, கொடிகாமம். (38392)

## காணி விற்பனைக்கு

சுன்னாகம் மாகியப்பிட்டி வீதியில் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு அருகில் கிணற்றுப் பங்குள்ள 4¾ (நாலேமுக்கால்) பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: பொ.சோதிவேல், வாசிகசாலை வீதி, 3ஆம் கட்டை, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். (38371)

சக்கலாவத்தை, வைரவர் கோயிலடி, கரணவாய் வடக்கு, கரவெட்டி என்னுமிடத்தில் கிணற்றுப் பங்குடன் கூடிய ஒரு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.:| 077 6288725. (38305)

## தேவை

சிறிலங்கா நிறுவனத்தின் தொலைபேசி இணைப்பு ஒன்று தேவை. மாற்றிக் கொடுக்க விரும்புபவர்கள் உடன் தொடர்புகொள்ளவும். T.P.: 0776 949753, 077 6139275. (38049)

## வீடு விற்பனைக்கு

நாமகள் பாடசாலை பின்புறம் புகையிரத நிலைய வீதியில் 2 பரப்புக் காணியுடன் கூடிய புதிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: K.றூபன்

கஸ்தூரி களஞ்சியம், திருநெல்வேலி.

T.P. No.: 077 6106744.

(38374)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broilar குஞ்சுகள் 42/=. பேட்டுக் குஞ்சுகள் 08.08.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை நெல்லியடிக் கிளைகளிலும், சுட்டி பாம் - வட்டுக்கோட்டை, சந்நிதி பாம் - தொண்டைமானாறு, ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம்சென்றர் - இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (38283)

## சிறுகதை எழுதுவது எப்படி?

O/L மாணவர்கள், A/Lமாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் எல்லோருக்கும் வேண்டிய நூல். எல்லா வகை இலக்கியங்களும் படைத்த கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தம்பிள்ளையின் 20ஆவது நூல். ரூபா 150. (38369)


## கமநல கேந்திர நிலையத்துக்கு இரட்டையர்புலத்தில் காணி

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவுக்கென நிறுவப்படவுள்ள புதிய கமநல சேவை கேந்திர நிலையத்தை சண்டிலிப்பாய் இரட்டையர்புலம் வைரவர் ஆலயத்தின் பொறுப்பிலுள்ள காணியில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இக்காணியை இதற்கென அன்பளிப்புச் செய்வதற்கு ஆலய பரிபாலன சபை முன்வந்துள்ளது.

நிக்கொட் திட்டத்தின்கீழ் கேந்திர நிலையத்தை இந்தக் காணியில் நிறுவுவதற்கான நிதியினைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.

யாழ். கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் மற்றும் உயரதிகாரி அண்மையில் சண்டிலிப்பாய் இரட்டையர் புலம் வைரவர் ஆலயத்திற்கு முன்பாகவுள்ள இக்காணியை நேரடியாகச் சென்று பார்வையிட்டனர். பிரதான வீதி ஓரத்தில் இக்காணி அமைந்துள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேச செயலக பிரிவிலுள்ள விவசாயிகளின் நலன் கருதித் தனியான கமநலச் சேவைக் கேந்திர நிலையம் ஒன்று நிறுவப்படவேண்டும் என்று இப்பிரிவிலுள்ள விவசாயிகள் சம்மேளனங்கள் கடந்த பல வருடகாலமாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்து வந்தன.

வலி.தென்மேற்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இதற்கான தீர்மானம் ஒன்று முன்னர் நிறைவேற்றப்பட்டிருந்தது தெரிந்ததே. (ஐ-135)

## கோப்பாயில் வீதி விளக்குகள் ஒளிர்வதில்லை

கோப்பாய் ஓக.1

கோப்பாய் இராஜ வீதியின் முக்கிய சந்திகளான கோண்டாவில் இருபாலை வீதிச் சந்தி, கோப்பாய் கிருஷ்ணன் கோயிலடிச் சந்தி, கரந்தன் சந்தி, மாசிவன் சந்தி ஆகியா இடங்களில் பொருத்தப்பட்டிருந்த மின்குமிழ்கள் கடந்த சில மாதங்களாக ஒளிராமையினால் இந்த வீதியில் இரவு நேரங்களில் பயணம் செய்வோர் பல்வேறு சிரமங்களை அனுபவித்து வருகின்றனர். வழிப்பறி மற்றும் திருட்டுச் சம்பவங்களுக்கும் இது வாய்ப்பாகவுள்ளது. (ஐ-72)

## சண்டிலிப்பாயில் விரைவில் சமுர்த்தி முத்திரைகள்

வலி. தென்மேற்கு, ஓக.1

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த சமுர்த்தி பயனாளிகளுக்கு விரைவில் சமுர்த்தி முத்திரைகள் வழங்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்டச் சமுர்த்தி உதவி ஆணையாளரினால் கடந்தவாரம் இந்தப் பிரதேச செயலகத்திற்கு ஆறு ஆயிரத்து 73 சமுர்த்தி முத்திரைகள் வழங்கப்பட்டன. இப்பிரிவிலுள்ள சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் மூலம் சமுர்த்திப் பயனாளிகளுக்கு இவை விரைவில் விநியோகம் செய்யப்படவுள்ளன என்று வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார். (ஐ-135)


WANTED DYNAMIC YOUNG WOMEN AND MEN. COME! JOIN US,

Ladies and Gentlemen:

WE ARE BUNCH OF EXPERTS IN CONSTRUCTION INDUSTRY. LOOKING FOR EXPERIENCED / NON-EXPERIENCED CIVIL ENGINEERS / ACCOUNTANTS/ADMINISTRATORS / AUTO CAD DESIGNERS FOR A CONSTRUCTION FIRM BASED IN VANNI.

THE EXPERTS WHO JOIN US WILL BE THE FIRST TO DO THE BEST.

SALARY NEGOTIABLE

FOOD AND ACCOMMODATION PROVIDED



WE WILL BUILD YOUR FUTURE, WHILE YOU BUILD THE NATION.

IF INTERESTED, SEND YOUR CURRICULAM VITAE TO:

Advertisement No - 2664, C/o Uthayan.

(சி.44146)

## ஸ்ரீ துர்க்கா ஜோதிட நிலையம்

இந்தியாவிலிருந்து வந்துள்ள

ஸ்ரீ ராமகிருஸ்ண சாஸ்திரிகள்

ஸ்ரீ பாலகங்காதர சாஸ்திரிகள்

கல்வி, வியாபாரம், திருமணப் பொருத்தம், கணவன்-மனைவி உறவு, அரசியல் பிரச்சினைகள், வீடு - கடை வாஸ்து, வெளிநாட்டுப் பிரயாணம், பிள்ளைகள் பாக்கியம், ஆயுள்ரேகை, எண்கணிதம், கைரேகை மூலம் அறிந்துகொள்ள நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியது

**அறை எண் 01, ரி.கே.ரூறிஸ்ற் இன்,**

இல.200, பலாலி றோட், கந்தர்மடம் சந்தி (அரசடி வீதி), யாழ்ப்பாணம். T.P.: 021 2225680, 0776627373. (38044) (14.15.26)

## கருமாரி அம்மன் ஜோதிடம்




ஸ்ரீ பாலகிருஷ்ண சாஸ்திரி

இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ளார்.

இவர் கைரேகை மூலமாக - நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை மற்றும் தொழில் வியாபாரம், கல்வி, கணவன்-மனைவி ஒன்று சேர்தல், வெளிநாட்டுப் பயணம் பற்றியும் மற்றும் எதிர்காலப் பலன்களையும் அறிந்துகொள்ள நாடுங்கள்:

**பிள்ளையார் இன் அறை எண் 09,**

31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

T.P.No.: 0779233191 (38399)(26/14/15)

## ஜோதிடம்



Pandit Kr. Luxumy Narasimha

ஸ்ரீ சாயி பாபா ஜோதிடம் துர்க்காம்பாள் வசீகரணம் சக்தி ஜோதிடர் இந்தியாவின் புகழ்பெற்ற கேரள மாந்திரீக ஜோதிடர் கணவன் -மனைவி சண்டை, பிரிவு/காதல் திருமணத்தடை- இதுவரை திருமணமே ஆகாதவர்கள்/ பிள்ளைகள் சொல் கேளாமல் திரிவது/ வேலை, தொழில் உத்தியோகம் இப்படி பலவாறான பிரச்சினைகளைத் தீர்த்தும் வைப்பார். செய்வினை, பில்லி சூனியத்தால் பாதிப்பு/கண் திருஷ்டியினால் வாழ்வில் முன்னேற்றம் இல்லாமை ஆகியவற்றிற்கும் பலன் சொல்வதோடு தீர்த்தும் வைப்பார்.

தொடர்பு: **SRI SAWBAKYA INN**

Guest House,

235/7,PointPedro Road, Anaipanthy, Jaffna.

T.P.: 021- 222 6779, 077 9233070.

(38176) (2614.15)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 27 - 11 - 1906 | 03 - 07 - 2005 |

எங்கள் குடும்ப விளக்கு

### திருமதி சின்னம்மா நமசிவாயம்

அன்பின் பிறப்பிடமாய் ஆதரவு காட்டிய அன்னையே!

ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகிறோம்

அன்னாரின் சபிண்டீகரணக் கிரியைகள் நாளை (02-08-2005) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'இந்திரகிரி', இரும்பு மதவடி, கரவெட்டி. (38404) (14-26) - குடும்பத்தினர்.


# கேள்வி அறிவித்தல்

## இலங்கை மின்சார சபை (வடமாகாணம்)

யாழ்ப்பாணப் பிரதேசத்தின் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள மின்சார பாவனையாளர் சேவை நிலையங்களில் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்த வேலைகளுக்காகத் தனித்தனியான முத்திரை இடப்பட்ட கேள்விகள் இலங்கை மின்சார சபையின் (வடமாகாணம்) மாகாண கேள்விச் சபைத் தலைவரால் 2005-08-16 ஆம் திகதி முற்பகல் 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

| யாழ்ப்பாணப் பகுதி | கேள்விக்கான தலைப்பு | கேள்வி இலக்கம் |
|---|---|---|
| 1.யாழ்ப்பாணம் | மின்சார பாவனையாளர் சேவை நிலையங்கள் சேவை இணைப்புக்கள் | ம.ஜீ.எம் /என்.பி/2005/35 |
| 2.யாழ்.புறநகர் பகுதி | கட்டுமானப் பணி | ம.ஜீ.எம் /என்.பி/2005/36 |
| 3.சுன்னாகம் | | ம.ஜீ.எம் /என்.பி/2005/37 |
| 4.பருத்தித்துறை | | ம.ஜீ.எம் /என்.பி/2005/38 |
| 5.வட்டுக்கோட்டை | | ம.ஜீ.எம் /என்.பி/2005/39 |
| 6.சாவகச்சேரி | | ம.ஜீ.எம் /என்.பி/2005/40 |

கேள்விக் கோரிக்கைக்கான உரிய நேரமுடிவில் யாழ்ப்பாணம் இலக்கம் 188, ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கை மின்சார சபையின் வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் அலுவலகத்தில் கேள்விகள் உடனடியாகத் திறக்கப்படும்.

கேள்வியாளர்கள் ஒவ்வொரு கேள்விக்குமான கேள்வி விண்ணப்பத்தினை மீளளிக்கப்படாத கேள்வி விண்ணப்பக் கட்டணமாக ரூபா 500/- ஐ பணமாகச் செலுத்துவதன் மூலமோ அல்லது கொழும்பு இலங்கை மின்சாரசபை பொதுமுகாமையாளரது பெயரிலான காசுக்கட்டளை அல்லது வங்கிக் கட்டளையாகவோ 2005 ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதிவரையான எந்தவொரு வேலைநாளிலும் முற்பகல் 9மணி முதல் பிற்பகல் 3 மணி வரை கீழ்க்குறிப்பிடப்படும் விலாசத்தில் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ள இயலும். இலங்கை மின்சார சபையில் பெறப்பட்ட கேள்வி விண்ணப்பப்பத்திரங்களிலேயே கேள்விகள் இரட்டைப் பிரதிகளாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

பிரதிப் பொதுமுகாமையாளர் (வடமாகாணம்),
இலங்கை மின்சாரசபை, இலக்கம் 188, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம், தொலைபேசி இலக்கம்: 021-222 2496, 021-222 3233
தொலைநகல்: 021- 222 2497

அல்லது

மின்எந்திரி, யாழ்.பிரதேசம், இலங்கை மின்சாரசபை, சுன்னாகம்
தொலைபேசி: 021-222 3002 தொலைநகல்: 021-222 3002

**கேள்விக்கான தலைப்பும் கேள்வி இலக்கமும் கடித உறையின் இடதுகை மூலையில் குறிப்பிடப்படுவதுடன் பூரணமாக நிரப்பப்பட்ட கேள்வி ஆவணங்கள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்துக்கு 2005 ஓகஸ்ட் மாதம் 16ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.**

தலைவர்,
பிராந்திய கேள்விச்சபை (வடமாகாணம்),
இலங்கை மின்சார சபை,
இலக்கம் 188, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-44154)(26-14-15)


## 30.07.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 300452908 இலிருந்து 300470838 வரை

சீட்டிழுப்பு இல. 1628

வெற்றி எண்கள்

**14 19 21 31** சுப்பர் எண் **02**

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.47,02,850/- வெல்லப்பட்டுள்ளது

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 01 | 47,02,850/- | 47,02,850/- |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 37 | 5,000/- | 1,85,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 474 | 1000/- | 4,74,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,529 | 500/- | 7,64,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 23,219 | 40/- | 9,28,760/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 21,975 | 20/- | 4,39,500/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,29,798 | 10/- | 32,97,980/- |
| | | மொத்தம் | 1,17,92,590/- |
| தங்க நகைகள், தையல் இயந்திரம்,சைக்கிள் | 5 | 1,00,000/- | 5,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 1,22,92,590/- |

**இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 20,00,000/-**

தொடர் இல. 200492293 க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுக்கள் 2005 ஆகஸ்ட் 03 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகைகள், தையல் இயந்திரம் மற்றும் சைக்கிள் அடங்கிய பரிசு முறியை வென்றெடுத்த 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மாத்தளை | 300465787-7-06 |
| மொனராகலை | 300454013-6-33 |
| கம்பஹா | 300459748-1-98 |
| களுத்துறை | 300464178-6-58 |
| புத்தளம் | 300463295-6-67 |

அபிவிருத்தி லொத்தர் சபை

இல. 33,சென். மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாவடி தெற்கு - கொக்குவில்

அருள்மிகு ஸ்ரீ ஆதிகாளி அம்பாள் தேவஸ்தானம்

# தேர் வெள்ளோட்டவிழா



(38412)

அம்பிகை அடியார்களே!

நிகழும் சர்வமங்கல பார்த்திப வருஷம் ஆடித்திங்கள் 16ஆம் நாள் (01.08.2005) திங்கட்கிழமை எம்மால் புதிதாக அமைக்கப்பட்ட புதிய தேரின் வெள்ளோட்டவிழா நடைபெற அன்னையின் அருள் கிடைக்கப்பெற்றுள்ளது. அடியார்கள் அனைவரும் இவ்விழாவில் கலந்து, அன்னையின் அருள் பெற்றுய்வீர்களாக!

பிற்பகல் 3 மணிக்கு விழா ஆரம்பம்.

இறைவணக்கம்

ஆசியுரை: சிவஸ்ரீ சாமி ஸ்ரீஸ்கந்தராஜக் குருக்கள்

தலைமையுரை

திரு. கந்தையா யோகராசா (ஆலய பரிபாலன சபைத் தலைவர்) தேர்த்திருவிழா உபயகாரர்.

தேரை நிர்மாணித்த கலைஞர் விஸ்வப் பிரம்மஸ்ரீ செ.பாலச்சந்திரன் அவர்களுக்குச் சிறப்புக்கௌரவம்

தேர்நிர்மாணம் பாலச்சந்திரன் குழுவினர் (காளிகா சிற்பாலயம், திருநெல்வேலி.)

நன்றியுரை திரு. ஆறுமுகம் தெய்வேந்திரம்

அனைவரும் வருக: அன்னை அருள் பெறுக!

தாவடி தெற்கு,
கொக்குவில்.

தேர்த்திருவிழா உபயகாரர்களும், ஆலய பரிபாலன சபையினரும்.

(16-34-33)

**2007A/L**

- இந்து நாகரிகம் S.ஜெயக்குமார்
- தமிழ் - S.சிவா
- அளவை. - P.கமல்
- கிறிஸ் - A.மல்லிகா
- ENG. - K.RAMANAN
- புவி. - ஆசிரியர்

SHAMROCK
J/ஊச்சமோட்டை.

**S.L.A.S**

வழிகாட்டல் வகுப்பு
பிரிவு - II
ஆரம்பம் 05.08.2005
வெள்ளி 3.30 p.m.

**D.C.C.A**
ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

# யாழ். கந்தர்மடம் பகுதியில் ஒரேநாளில் 3 திருட்டுகள்

வலி.வடக்கு,ஓக.1

யாழ்.கந்தர்மடம் மணல்தறை வீதிப் பகுதியில் ஒரேநாளில் மூன்று வீடுகளில் திருட்டுகள் இடம்பெற்றுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை மட்டும் இப்பகுதியிலுள்ள வீடுகளில் திருட்டுகள் இடம்பெற்றுள்ளன.

அன்றையதினம் முற்பகல் 11 மணியளவில் திருநெல்வேலி சிவன் கோவிலுக்குப் பின்னால் உள்ள வீட்டினுள் தனிமையாக இருந்த வயோதிபப் பெண்ணைத் தாக்கிக் காயப்படுத்தி விட்டு அவர் அணிந்திருந்த தங்கச்சங்கிலியை இரு இளைஞர்கள் பறித்துச் சென்றுள்ளனர்.

அதேநாள் மணல்தறை ஒழுங்கையில் உள்ள ஒரு வீட்டில் நீர் இறைக்கும் இயந்திரம் திருட்டுப் போயுள்ளது.

மற்றுமொரு வீட்டினுள் யன்னல் கம்பியை வளைத்து உட்புகுந்த திருடர்கள் அலுமாரிகளை உடைத்த போதிலும் விலைமதிப்புள்ள பொருள்கள் சிக்காததால் கிடைத்த பணத்தை எடுத்துக் கொண்டுசென்றுள்ளனர். (ஒ-86)

**S.L.A.S போட்டிப் பரீட்சைக்கான வகுப்புகள்**

பிரிவு I
செவ்., புதன், வியாழன்
4.30-6.30

பிரிவு II
சனி 3-6
ஞாயிறு 8-11

- இப்பிரிவுகளில் இணையும் புதியவர்களுக்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் 4.30-6.30வரை ஆரம்ப விடயங்கள் கற்பிக்கப்படும்.
- வகுப்புகள் ஆரியகுளம் சந்திக்கு அண்மையில் **D.M.I.** கல்வி நிறுவனத்தில் நடைபெறும். (38410) (33-16-34)

# விளையாட்டுவிழா

யாழ்ப்பாணம்,ஓக.1

வலி.கிழக்குப் பிரதேச கோப்பாய் மத்தி குடும்ப முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

விழாக்குழுத் தலைவி திருமதி அமிர்தாம்பிகை வெள்ளியங்கிரிநாதன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதில் முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் சி.சிவனேசன், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் எஸ்.சிவகடாட்சம், ஓய்வு பெற்ற அதிபர் அ.பஞ்சலிங்கம், கோப்பாய் நாவலர் வித்தியாலய அதிபர் வை. குணசேகரம், வலி.கிழக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்பருதி , அச்செழு சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் இ.இராஜசேகரம், கோப்பாய் மத்தி கிராம சேவையாளர் கே.ஜே.ரட்ணராஜா, உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை அதிபர் மு.விக்னேஸ்வரன், யாழ்.வலய முன்பள்ளி இணைப்பாளர் பி.விசாகினி, கோப்பாய் பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் மகிழினி ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

(ஓ-72-204)

# இலங்கை வங்கி ஆண்டுவிழா

யாழ்ப்பாணம்,ஓக.1

இலங்கை வங்கியின் 66ஆவது ஆண்டு நிறைவு நாள் நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

இலங்கை வங்கி வாடிக்கையாளர் சேவையில் 66 ஆண்டுகளைப் பூர்த்தி செய்ததை முன்னிட்டு இவ் விழா கொண்டாடப்படுகிறது.

(ஐ-204)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் மனைப்பொருளியல் ஆசிரியர்
திருமதி தே.ஜஸ்மின் யூலியற்
அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் யேசுதாசன் சின்னராசா (செட்டியார்)**

அவர்கள் 28.07.2005 வியாழக்கிழமை காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/புங்குடுதீவு மகாவித்தியாலயம்,
புங்குடுதீவு. (38406) (33-16-34)

அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு
18
01
1959



உதிர்வு
02
07
2005

## திருமதி விமலாதேவி தவேந்திரராசா

**அன்பாய் அரவணைத்து ஆதரவு மொழிபேசி**
**பண்பாய் வாழ்ந்த உங்கள் மறைவால்**
**மிகவும் வேதனையுறுகின்றோம்.**
**உங்கள் ஆத்மா ஆண்டவன் திருவடியில்**
**சார்ந்திருக்கப் பிரார்த்திக்கின்றோம்.**

இன்று (01.08.2005) திங்கட்கிழமை நடைபெறுகின்ற அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளிலும் எமது இல்லத்தில் நிகழும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளிலும், மதியபோசனத்திலும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இதனை ஒரு தனிப்பட்ட அழைப்பாக ஏற்று குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பெருங்குளம் சந்தி,
சாவகச்சேரி. (சி-44158) (16-33-34)

சி.தவேந்திரராசா
குடும்பத்தினர்.

**திருமணக்கார் வாடகைக்கு**



திருமணம், சுற்றுலா ஏனைய தேவைகளுக்கு வெள்ளைநிற, சில்வர் நிற புத்தம் புதிய (குளிரூட்டப்பட்ட) நவீன கார் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம். (38403) (33-16-34)

தொடர்பு:-
சிவா வீடியோ லைபிறறி,
இராமலிங்கம் வீதி, முடமாவடி.
(பூங்கனிச்சோலையருகில்), திருநெல்வேலி கிழக்கு.

**மனோகரா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
மாதவன், சதா, கோவை சரளா மற்றும் பலர் நடித்த
**பிரியசகி**
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30.

**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின அதிரடி வெளியீடு புது இளம் புயல் ஜெயம் ரவி, ரேணுகா மேனன், வடிவேல் மற்றும் பலர் நடித்த
**தாஸ்**
காட்சிகள்: 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே.). (ரீல்ஸ்)

**ராஜா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு காதல் புகழ் பரத், ரேணுகா மேனன்
**பெப்ரவரி 14**
காட்சி நேரம்: 10.30,2.30, 6.30, 9.30 (பு.நே.)

**நாதன்ஸ் சினிமா** ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.



இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு அர்ஜுன் சினேகா, கிரண், வடிவேல் நடித்த
**சின்னா**
6.30, 9.30. (பு.நே.)

# மரண அறிவித்தல்கள்

## யேசுதாசன் சின்னராசா(செட்டியார்)

(கட்டட ஒப்பந்தகாரர்)



ஆஸ்பத்திரி வீதியைப் பிறப்பிடமாகவும் கதீற்றல் வீதியை வசிப்பிடமாகவும்கொண்ட யேசுதாசன் சின்னராசா 28.07.2005 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோசவ் எமிலியா தம்பதியரின் அன்பு மகனும் திரேசம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சவிரிமுத்து-முத்தம்மா தம்பதியரின் மருமகனும் யஸ்மின் யூலியற் (யா-புங்குடுதீவு மகாவித்தியாலயம்), யோண்சன்(ஜேர்மனி), ஜெனிற்றா(சுவிஸ்), றொபின்சன் (சுவிஸ்), அன்றனிற்றா(சுவிஸ்), ஆகியோரின் பாசமிகு தந்தையும் தேவசகாய ராசா (டானியல் படமாடம்), ஜெனோவா (ஜேர்மனி), ராஜசிங்கம் (சுவிஸ்), ஆத்தீஸ் (சுவிஸ்), அண்ணாத்துரை (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் சிறிளப்பு, காலஞ்சென்ற தவமணி, எலிசபேத் ஆகியோரின் சகோதரரும் சிறில் யோசவ், றீற்றம்மா, பிலோமினா, அந்தோனியாப்பிள்ளை, காலஞ்சென்ற மரியதாஸ் ஆகியோரின் மைத்துனரும் பிலோமினா, மாதவராசா, தேவநாதர் (சாந்தப்பு), காலஞ்சென்ற அமிர்தலிங்கம் ஆகியோரின் சகலனும் பியூலிற், ஒஸ்வேட், அனுஷியன் ஆகியோரின் பெரிய தகப்பனாரும் கிறிஸ்ரீனா, யஸ்ரீனா, செபஸ்ரீனா ஆகியோரின் மாமனாரும் ராகேஸ் (சுவிஸ்), ஆகாஸ், இஸ்ரெலானி, செறோமி, ஜெறாட் சோன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (01.08.2005) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

75, கதீற்றல் வீதி,
யாழ்ப்பாணம்.
(T.P:.021 - 4591319)
(38405) (33-34-16)

தகவல்:
திரேசம்மா (மனைவி),
சகாயன் (மருமகன்).

## இராஜரட்ணம் மகேஸ்வரன்



தாவடி வடக்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பு மெசஞ்சர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜரட்ணம் மகேஸ்வரன் நேற்று (31.07.2005) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜரட்ணம்-மகேஸ்வரி தம்பதியின் அன்புப் புதல்வனும் அச்செழுவைச் சேர்ந்த சின்னத்தம்பி -அன்னம்மா தம்பதியின் மருமகனும் தயாநிதியின் அன்புக் கணவரும் பிரதீபன், பிரகாஸ், றெனித்தா, ஜெசிந்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும் மனோகரன், சிறிகாந்தன், யோகேஸ்வரன், பாஸ்கரன், சிவகரன், கோமதி, கலைமதி, ஜெயமதி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (03.08.2005) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் இல.123, எலிகவுஸ் றோட், கொழும்பு - 15 இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொலைபேசி:-
0112 543307
0112 529698
0112 522078
(சி-44157) (33-34-16)

தகவல்:
தயாநிதி (மனைவி),
பிரதீபன் (மகன்).

## திருமதி சின்னாச்சி கந்தையா



கந்தர்மடம், ஆத்திசூடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னாச்சி கந்தையா அவர்கள் நேற்று (31.07.2005) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகர் கந்தையா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திருமதி பாக்கியம், திருநாவுக்கரசு (டென்மார்க்), தனலெட்சுமி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற இரத்தினம், ராஜினிதேவி (டென்மார்க்), செல்வநாயகம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் மோகன் (ஜேர்மனி ), புஸ்பராணி (ஜேர்மனி), இரத்தினேஸ்வரி (சுவிஸ்), உதயகுமார் (ஜேர்மனி), சத்தியபாமா (சுவிஸ்), சத்தியரூபி (சுவிஸ்), திவாகர், சதீஸ் (டென்மார்க்), அனோயா (டென்மார்க்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தர்சனா, கௌசிகன், டனுசன், ஜெனுசன், அகினா, டிலக்சன், ஜென்சிகா, அபினா, கானுஜன், நிகிலா, கார்த்திகா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2005) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, மாலை 5 மணியளவில் அவரது பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம்.
(38411) (33-34-16)

தகவல்:
திருநாவுக்கரசு (மகன்),
திருமதி தனலெட்சுமி (மகள்).

## சின்னத்தம்பி ஆறுமுகம்

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி ஆறுமுகம் அவர்கள் நேற்று (31.07.2005) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி - சின்னப்பிள்ளை தம்பதியின் சிரேஷ்ட புதல்வனும் செல்லம்மா அவர்களின் அன்புக் கணவரும், நவரட்ணம் (மின்சாரசபை, சாவகச்சேரி), நடராஜா (கிராம உத்தியோகத்தர், நாவற்குழி), காலஞ்சென்ற நமசிவாயம் ஆகியோரின் பாசமிகு தந்தையும் நாகம்மா, காலஞ்சென்ற சண்முகம், சீதாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராஜேஸ்வரி, சாந்தாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் யஜிந்தா, யதுர்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2005) திங்கட்கிழமை அவரின் நாவற்குழி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 3 மணிக்கு பிணமுருங்கை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

நாவற்குழி,
கைதடி. (38415)
(16-33-?)

தகவல்:
ஆ.நடராஜா (மகன்-கிராம உத்தியோகத்தர், நாவற்குழி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல்வாதிகளின் இரும்புக் கரங்களால் நீதியின் குரல்வளை நசுக்கப்பட்டுள்ளது

## ஐ.தே.க. ராஜித சேனாரத்ன எம்.பி. கூறுகிறார்

கொழும்பு,ஓக.1

படுமோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் இலங்கையின் நீதித்துறையைப் பார்த்து இலங்கையர் மட்டுமன்றி முழு உலகத்தினருமே காறி உமிழ்கின்றனர். அரசியல்வாதிகளின் இரும்புக் கரங்களினால் நீதித்துறையின் குரல்வளை நசுக்கப்பட்டுள்ளது.

- இப்படி நீதித்துறை பற்றி விமர்சிக்கிறார் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே ராஜித சேனாரத்ன மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

எஸ்.பி.திஸாநாயக்கா மீது தொடுக்கப்பட்ட லஞ்ச ஊழல் வழக்கு அவரைப் பழி வாங்குவதற்காக சோடிக்கப்பட்டது என்பது வெளியாகியுள்ளது. ஒரு முக்கிய அரசியல்வாதியைப் பழிவாங்குவதற்காக லஞ்ச ஊழல் திணைக்களத்தினரே திட்டமிட்டு வழக்கொன்றைச் சோடித்தனர். எஸ்.பி.திஸாநாயக்கா மீது யாரும் முறைப்பாடு செய்யாத ஒரு நிலையில், இவ் வழக்கு தாக்கல்செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டது.

மேல்நீதிமன்ற நீதிபதி ரோஹினி பெரேரா எஸ்.பி. திஸாநாயக்க மீதான வழக்கை விசாரித்துவிட்டுத் தீர்ப்பு வழங்கியபோது குற்றத்தை நிரூபிப்பதற்குப் போதிய சாட்சிகள் உண்டா என்பது பற்றி லஞ்ச ஊழல் திணைக்களம் நன்றாக ஆராய்ந்து பார்த்த பின்னரே ஒரு வழக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருக்க வேண்டும். குற்றச்சாட்டை நிரூபிக்க முடியாத வழக்கை நீதிமன்றுக்கு எடுத்துவருவதில் எதுவித அர்த்தமும்கிடையாது - என்று கூறியுள்ளார்.

இலங்கையில் நீதிக்குத் தலைவணங்கும் ஒருசில நீதிபதிகளில் ரோஹினி பெரேராவும் ஒருவர்.

ஜனாதிபதியின் நெருங்கிய சகாவாகத் திகழும் பிரதியமைச்சர் ஒருவர் முன்னர் கடற்படையில் கடமையாற்றினார். அவர் கடற்படையில் கடமையாற்றியபோது பெருந்தொகையான பணத்தைச் சுருட்டினார் என்ற குற்றச்சாட்டில் கோர்ட் மார்ஷல் முன் விசாரிக்கப்பட்டார். அவர் வகித்த பதவியிலிருந்தும் நீக்கப்பட்டார். ஆனால், அவர்மீது கடற்படைத்தலைமையகம் சுமத்திய குற்றச்சாட்டுக்கள் அடங்கிய கோவையைக் கடற்படைத் தளபதிகளிடமிருந்து ஜனாதிபதி வாங்கிக் கொண்டார். குறிப்பிட்ட பிரதியமைச்சர்மீது உள்ள ஊழல் குற்றச்சாட்டு மூடி மறைக்கப்பட்டுவிட்டது. இதுதான் இந்த நாட்டின் நீதி.

அமைச்சர் மங்கள சமரவீர கடனட்டை மூலம் அரச பணத்தை விரயம் செய்தமை தொடர்பாக நான் ஆதாரபூர்வமான ஆவணங்களைச் சமர்ப்பித்தேன். ஆனால், அதுபற்றி லஞ்ச ஊழல் திணைக்களம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஜனாதிபதி கடந்த 12 வருடங்களாகத் தனக்கு எதிரானவர்களைப் பொய்க் குற்றச்சாட்டுக்களைச் சுமத்திப் பழி வாங்கி வந்திருக்கிறார். இதுதான் இந்த நாட்டுக்கு ஏற்பட்டுள்ள சாபம்.

நீதித்துறை என்று சுதந்திரமாகத் தனது கடமையைச் செய்கிறதோ அன்றுதான் இந்த நாட்டுக்கு விமோசனம் ஏற்படும் - என்றார் ராஜித.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸும் கலந்துகொண்டார்.(க)



தூவல் நீர்ப்பாசன அறிமுக விழாவும் அதன் பயன்பாடு தொடர்பான ஆய்வுக் கருத்தரங்கும் யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி உரை நிகழ்த்துவதையும் உதவி ஆணையாளர் க.சுந்தரேசன், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சங்கர் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (ஐ-204)

## பலாலி விமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படைத் தளபதி தெரிவித்தார்.

விமானங்கள் தரையிறங்கும்போதும் மேலெழும்போதும் ஓடுபாதையில் அதிர்வு ஏற்படுவதை அடுத்தே அது புனரமைக்கப் படவுள்ளதாக உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கப்பட்டது. எனினும் 2000 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணம் மீது நடத்திய தாக்குதலின்போது இந்த ஓடுபாதை அதிகளவில் சேதத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்படுகிறது.

பலாலி ஓடுபாதைப் புனரமைப்புப் பூர்வாங்கப் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டன அவை ஒருங்கிணைக்கப்பட்டு விரைவுபடுத்தப்பட்டதும் விமான நிலையம் போக்குவரத்துக்கு மூடப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கே யாழ்ப்பாணத்தில் உள்ள படையினருக்கான பிரதான விநியோக மார்க்கங்களில் ஒன்று பலாலி விமானத்தளம். இதனூடாக நாளொன்றுக்கு 750 படையினர் தெற்குக்கும் வடக்குக்கும் இடையே போக்குவரத்தில் ஈடுபடுகின்றர். இதற்கென ரஷ்யத் தயாரிப்பான அன்ரனோவ் - 32 விமானம் ஒன்று பயன்படுத்தப்படுகின்றது.

விமான ஓடுபாதை புனரமைக்கப்படும் காலப்பகுதியில் படையினரின் போக்குவரத்துக்கென எம்.ஐ.26 துருப்புக்காவிக் ஹெலிகள் இரண்டு இந்தியாவிடமிருந்து வாடகைக்குப் பெறப்படவுள்ளன. இந்தக் ஹெலிகள் மூலம் ஒரு தடவையில் 95 பேரைக் காவிச் செல்லமுடியும். படையினரின் மேலதிகப் போக்குவரத்துக்குக் கடற்படைக் கப்பல்கள் பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விமான ஓடுபாதைப் புனரமைப்புக்கு இந்தியா உதவிகளை வழங்க முன்வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## ஜனாதிபதித் தேர்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீகுதியானவர் நீங்கள்தான். ஆனால், ரட்ணசிறி விக்கிரமநாயக்க சுகவீனமுற்றிருக்கிறார் என்பதனால் எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை' - என்றார். நான் பரவாயில்லை இம்முறை அவருக்குக் கொடுங்கள் அடுத்தமுறை எனக்குத் தாருங்கள் என்று தெரிவித்தேன்.

நான் பதவிகளுக்குப் பின்னால் அலைபவன் அல்ல என்பதால் இவற்றைப் பற்றி கவலைப் படுவதுமில்லை - என்றார் அமைச்சர்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி. சுதந்திரக் கட்சியை ஆதரிக்கும் என்றே எதிர்பார்க்கின்றோம். அவர்கள் எப்படியும் ஐ.தே.கவை ஆதரிக்கமாட்டார்கள் ஜே.வி.பியினர் தம் சார்பிலும் ஒரு வேட்பாளரை நிறுத்தினார்களாக இருந்தால் அதனால் எங்களுக்கு(சு.க.)தற்காலிக நஷ்டம் ஏற்படும். ஆனால், அவர்களுக்கு நிரந்தர நஷ்டம் ஏற்படும். அதனால் அவர்கள் சிந்தித்தே இந்த விடயத்தில் தீர்மானம் எடுப்பார்கள்.

ஜே.வி.பியினர் ஆழிப்பேரலை நிவாரண முகாமைத்துவக் கட்டமைப்புக்கு (பொதுக்கட்டமைப்பு) எதிராகக் கொண்டு செல்லும் போராட்டம் வெற்றிகரமாக அமையவில்லை. அவர்களின் எதிர்ப்பினை மக்கள் பொருட்படுத்தவேயில்லை. அவர்களின் ஆர்ப்பாட்டங்கள் கொழும்புக் கோட்டையிலும் லிப்டன் சதுக்கத்திலும் மற்றும் சில இடங்களிலும் மட்டுமே நடத்தப்படுகின்றன. அதற்கப்பால் கிராமங்களை அவை எட்டவில்லை. அங்குள்ள மக்களும் இதனைப் பற்றி கவலைப்படவில்லை. அவர்களுக்கு இதைவிட முக்கியமான பணிகள் வேறுள்ளன.

ஜனாதிபதி சந்திரிகா தனது பதவிக்காலம் முடிந்த பின்னரும் அரசியலில் இருந்து ஓய்வுபெறமாட்டார். எதிர்காலத்தில் நடைபெறவுள்ள அனைத்துத் தேர்தல்களுக்குமான நடவடிக்கைகளையும் அவரே மேற்கொள்வார். கட்சியின் தலைவராகவும் அவர் தொடர்வார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் எந்தச் சின்னத்தில் போட்டியிடுவது என்று இன்னும் தீர்மானிக்கப்படவில்லை.- என்றார். (க)

என்ன, குழப்புதா ?
வேடிக்கை

CHEMISTRY/ GROUP CLASSES
2006,2007,Repeat
PAPER,THEORY CLASSES
DIAS B.Sc.(Hons) spl.CHEM.
NAVALAR INSTITUTE

## மரக்கிளை முறிந்து சிறுமி காயம்!

தென்மராட்சி,ஓக.1

வேகமாக வீசிய காற்றினால் முறிந்த வேப்பமரக் கிளை அப்பகுதியில் விளையாடிக் கொண்டிருந்த சிறுமி மீது வீழ்ந்து காயப்படுத்தியது.

மீசாலையில் கடந்த வெள்ளியன்று இச்சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த த.மதுரா (வயது 11) என்னும் சிறுமியே காயமடைந்தவராவார்.

இவர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-117)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிக்கல்நிலை களையப்படும்வரை இடைக்கால ஏற்பாடாக அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் புலிகளின் முக்கிய போராளிகளுக்கு உச்ச பாதுகாப்பு வழங்கவேண்டும் என்ற உத்தரவு அரசுத் தலைமையிடமிருந்து இராணுவத்துக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (க)

## சிங்கள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இரவு 7 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்தவேளை மேற்படி நபர்கள் கடத்தப்பட்டனர். அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளை தமண பொலீஸார் நேற்றுக் காலை மீட்டனர்.

விசேட அதிரடிப் படையினரும் பொலீஸாரும் நேற்றுக்காலை முதல் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். (க)

## ஆறு விக்கெட்டுகளால் இந்திய அணி வெற்றி

தம்புள்ள,ஓக.1

இந்திய அணிக்கும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும் இடையே நேற்று தம்புள்ள மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் இந்திய அணி 6 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி 47.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்ளையும் இழந்து 178 ஓட்டங்களைப் பெற்றது.

அடுத்துத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 36 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை மட்டும் இழந்து 180 ஓட்டங்களைப் பெற்றது.

52 ஓட்டங்களைக் குவித்த இந்திய அணித் தலைவர் ராகுல் டிராவிட் ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார். (ஒ)

## ரயில் கட்டணங்கள் இன்றுமுதல் அதிகரிப்பு

கொழும்பு,ஓக.1

ரயில் கட்டணங்கள் இன்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன. அனைத்துக் கட்டணங்களும் 50 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று ரயில் போக்குவரத்துப் பொது முகாமையாளர் பிரியலால் டி சில்வா தெரிவித்தார்.

டீஸல் விலை அதிகரிப்பே ரயில் கட்டணங்களின் உயர்வுக்கான முக்கிய காரணம் என்று ரயில் போக்குவரத்துப் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

கடந்த வருடம் ஜனவரி மாதம் இறுதியாக ரயில் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டன. அதன் பின்னர் தூரங்களுக்கிடையிலான கட்டண வேறுபாடு நிலவியது. புதிய கட்டணங்களில் அவை அனைத்தும் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன . (ஒ-ரி)

## புலிகளின் பதில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒலப்டொட்ரீர் தெரிவித்தார்.

எனினும், அது தொடர்பான பதில் ஏதும் இதுவரை தமக்குக் கிடைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (க)

## ஆயுதங்களைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சு இன்றுவரை தொடரவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள தன்னாட்சி அதிகார விடயம் பேச்சுக்காக எடுக்கப்படவுமில்லை. அது முன்னெடுத்துச் செல்லப்படவுமில்லை.

இவை எல்லாவற்றிக்கும் மேலாக தேசிய அழிவு என்று கூறப்படுகிற ஆழிப்பேரலையின் பின்னரும் கூட, மனிதாபிமான அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய பொதுக் கட்டமைப்பைக் கைச்சாத்திடுவதற்குக் கூட அரசு ஆறுமாத காலம் இழுத்தடித்திருந்தது. இலங்கையின் நீதித்துறை கூட அதனைத் தடைசெய்துள்ளது. இவ்வாறான ஒருவித சூழலில் எவ்வாறு விடுதலைப் புலி கள் ஆயுதங்களைக் கீழே வைக்கமுடியும்.

தமிழ் மக்களுடைய பலமே தமிழீழ விடுதலைப் புலிகளுடைய ஆயுதம்தான். முறையான தீர்வு ஏற்பட்டு, தமிழர்கள் கோருகின்ற அதே அடிப்படையில் தங்களைத் தாமே பாதுகாத்துக்கொள்ளக்கூடிய அடிப்படையில் ஒரு தீர்வை எட்டுவதற்குத் தங்களுடைய தாயகத்தைத் தாங்களே ஆளக்கூடிய சூழ்நிலை ஏற்படாதவிடத்தில் அந்த ஆயுதம் என்கின்ற முழுமையான தற்பாதுகாப்பை ஒப்படைக்க முடியாது. இது ஒரு தவறான செயலாகும்.

முதலில் அவர்கள் பிரச்சினையைத் தீர்க்கட்டும். அதன் பிற்பாடு தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுத ஒப்படைப்புத் தொடர்பாகச் சிந்திப்பார்கள் - என்றார். (க)

அறிமுகம் TVS STAR

உங்கள் நம்பிக்கை, உங்கள் வெற்றிக்கு வழி கோலும் TVS STAR கம்பீரமான தோற்றம் அதிநவீன தொழில்நுட்பத்திலான 100CC எஞ்சின் கொண்ட
TVS STAR
யாழ். நகரில் விற்பனையில் உங்கள் தெரிவுக்கு TVS கொம்பனியின் அங்கீகாரம் பெ ற்ற விற்பனையாளர்.
யசோ மோட்டோர்ஸ்
163, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-44156) தொலைபேசி:- 021 222 2544

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.08.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.